தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

துணர் : 59 **மலர் :** 7

உள்ளுறை

1. **உறக்கமும் துயிலும் கலைச்சொல் தேர்வு** ... 289

டாக்டர் இராம. சுந்தரம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

2. **குயிலின் பாட்டு** ... 293

K. சோமசுந்தரம், B. A., B. L.,
(சென்ற இதழ் தொடர்ச்சி)

3. **சாத்தனாரின் உவமைத் திறன்** 298

டாக்டர் ஏ. என். பெருமாள்
(சென்ற இதழ் தொடர்ச்சி)

4. **தொல்காப்பிய உவமவியல் காண்டிகையுரை** 311

பேராசிரியர் ச. பாலசுந்தரம்.
(சென்ற இதழ் தொடர்ச்சி)

5. **தஞ்சாவூர் - பெயர்க் காரணம்** 327

டாக்டர். த. கோ. பரமசிவம்,
இணைப்பேராசிரியர்,
ஓலைச் சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2016

துணர்: 59 குரோதன — ஐப்பசி மலர்: 7

அக்டோபர் நவம்பர் 1985

உறக்கமும் துயிலும் : கலைச்சொல் தேர்வு

டாக்டர். இராம. சுந்தரம்

ஒரு பொருளை (Object) அல்லது கருத்துருவை (Concept) விளக்கச் சில சமயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கலைச்சொற்கள் இருக்கக்கூடும். இவற்றுள் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதையே எல்லா இடங்களிலும் மாற்றமின்றிப் பயன்

படுத்துவது வேண்டற்பாலது என்பர். இதனால் சொல்-குழப்பம், கருத்துக் குழப்பம் குறையும் என்பது அவர்தம் விளக்கம். இவ்வாறு ஒரு சொல்லையே ஒரு பொருளை அல்லது கருத்துருவைக் குறிக்கப் பயன்படுத்துவது வரவேற்கத் தக்கதே. ஆயினும் இது ஓர் இலட்சியநிலையே. நடைமுறை யில் இது பல சிக்கல்களை – அதிலும் குறிப்பாக, அறிவியல் துறையில் வளர்நிலையிலுள்ள மொழிகளில் - உண்டாக்குகிறது,

'Sleep' என்ற தலைப்பில் ஓர் அறிவியல் கட்டுரை. இதை மொழிபெயர்ப்பு செய்தபோது ஓர் இடர்பாடு. அதன் அடிப் படையில் சில கருத்துக்கள்.

இக்கட்டுரையில் ஆங்கில, கிரேக்கக் கலைச்சொற்கள் பயன்படுகின்றன. 'Sleep' என்ற சொல் வினையாகவும் பெயராகவும் வழங்குகிறது. தமிழிலும் உறங்கு, தூங்கு, துயில், துஞ்சு என்ற வினைகளும் உறக்கம், தூக்கம் துயில் என்ற பெயர்களும் பயில்கின்றன. 'துஞ்சு' என்பது பெரும்பாலும் வினையாகவே வருகிறது. (துஞ்சு புலி இடறிய சிதடன்-புறம் : 73 ; கடுஞ்சொல் அன்னை துஞ்சாள் - அகம் : 122) மேலும் துஞ்சு என்பது இறத்தல் என்ற பொருளிலும் வரும். 'செத்தாரைத்துஞ்சினார்' என்பது மங்கல வழக்கு என்பர். எனவே, அதை நீக்கி, மற்ற மூன்றில் ஒன்றை 'Sleep'என்பதற்கு நேரான சொல்லாகக் கொள்ளவேண்டும். இவற்றுள் 'துயில்' என்பது தொன்மைச் சொல்லாக, செவ்வியல் சொல்லாகக் கருதப்படுகிறது. ஆயினும், தொகைச் சொற்களில் இதுவே இன்றும் மிகுதியாக வழங்கப்பட்டு வருகிறது. (நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா - பாரதி பற்றிப் பாரதிதாசன் ; ஆழ்துயில், அறிதுயில், செறிதுயில், துயிலுணர்தல், மீளாத் துயில்). ஆனால் தனிச்சொல்லாக அருகியே காணப்படுகிறது. 'தூக்கம் என்பது 'தூங்கு' என்ற வினையடியாகப் பிறந்தது. 'தூங்கு' என்பதற்குத் தொங்குதல், அசைதல், ஒலித்தல், கூத்தாடுதல், வாடுதல் எனப் பலபொருள்கள் உள்ளன. தூக்கம் என்பது உறக்கத்தைக்குறித்தது பிற்கால வழக்கெனத் தெரி கிறது. 'உறக்கம்' என்பது 'உறங்கு' என்பதன் அடியாகப் பிறந்தது. இலக்கிய வழக்கிலும், பேச்சுவழக்கிலும் உறங்குதல் என்ற மூலப்பொருளில் பல நூற்றாண்டுகளாக வழங்கி வருவது திருவள்ளுவர் 'உறங்குவது போலும் சாக்காடு' என்றால். நம் தாய் 'கண்ணே கண்ணுறங்கு' என்கிறாள். ஆக, கால நீட்சியும் வழக்கு பயிற்சியும் உடைய 'உறக்கம்' என்கிற சொல்லை 'Sleep' என்பதற்கு நேரான பெயர்ச்சொல்லாகக் கொள்ளலாம்

ஆனால், தொகையாக வரும்போது, ‘உறக்கம்’ என்பது எளிதாகவும், இனிதாகவும் இல்லை. ‘deep sleep’ என்பதை ஆழ்உறக்கம் / ஆழ்ந்த உறக்கம் என்பதிலும், ‘ஆழ்துயில்’ என்பது நவின்றோர்க்கினிமை பயப்பதுடன், அதன் சொல்லாக்கமும் எளிமையாக உள்ளது. பண்டுதொட்டே, இது தொகை மொழியில் மிகுதியாகப் பயன்பட்டு வந்திருப்பதால், இப்போதும் இனிமையாகத் தெரிகிறது. ‘Somnambulism’ ‘உறக்க நடை’ என்பதினும், ‘துயில்நடை’ (உறக்கத்தில் நடக்கிற நோய்) எனவும் ‘Somnoloquism – உறக்கப்பிதற்று’ என்பதினும் துயில்பிதற்று எனவும், ‘insomnia’ ‘உறக்கமின்மை’ என்பதினும் துயிலின்மை / துயிலொழிவு எனவும் கூறுதல் சொற்செட்டும் சுவையும் உடையதாகத் தோன்றுகின்றது. (துயில் பேச்சு என்பதை நோக்க, துயில்பிதற்று என்பது பொருத்தமுடையதாகத் தோன்கிறது. உறக்கத்தில் பேசுவதில்லை, பிதற்றத்தான் செய்கிறோம். மேலும், ‘துயில்பேச்சு நோய்’ என்பதைவிடத் ‘துயில் பிதற்று நோய்’ இனிமையாகத் தெரிகிறது) கலைச்சொல்லாக்கத்தில் கருத்துத் தெளிவுதான் முக்கியம்; சொல்லினிமை, சொல்லெளிமை, சொல்தூய்மை முக்கியமல்ல என்றாலும், கருத்துத் தெளிவோடு இனிமை, எளிமை, தூய்மை சேர்ந்தால் ஏற்றுக் கொள்வதில் தடையில்லையல்லவா?

T 4740

ஒரே சொல்லைத்தான் பயன்படுத்த வேண்டும் என வரையறுத்துக் கொண்டாலும், சில நிலைகளில் விதிவிலக்கு தவிர்க்க முடியாததாகிறது. ஆங்கிலத்திலும் உறக்கம் பற்றிய அறிவியல் செய்திகளை விளக்க ‘Sleep’ என்பதனோடு ‘Slumber’ என்ற சொல்லும் இடையிடையே பயன்படுத்தப் படுகிறது. மேலும், உறக்கம் தொடர்பான நோய்களைக் குறிக்கையில் இலத்தீன் மற்றும் கிரேக்கச் சொற்களையும் அப்படியே வைத்துக் கொள்வதைக் காண்கிறோம். ‘Somnambulism’ என்பதின் மூலமான ‘Somnus + ambulane’ (துயில் நடை) என்பன இலத்தீன் சொற்கள். Hypnagogic stage’ (துயில் வருத்து நிலை) என்பதில் ‘Hypnagogic’ என்பன கிரேக்கத் தொகைச் சொல். ஆக, தமிழிலும், உறக்கம், துயில் ஆகிய இரு சொற்களையும் கையாளலாம். இவற்றோடு, Somnambulism / insomnia முதலிய அனைத்து நாட்டுச் சொற்களையும் அடைப்புக்குறிக்குள் இட்டு வழங்கலாம்.

எனவே, ‘Sleep’ எனத் தனித்து வினையாகவும் பெயராகவும் வரும்போது, ‘உறக்கம்’ என்பதையும், நோய்குறிக்கும்

தொகைச் சொற்களாக வரும்போது 'துயில்' என்பதையும் கையாளலாம்.

எ - டு :-

Sleep	—	உறக்கம்
Narcolepsy	—	துயில் நோய்
Somnaloquism	—	துயில் பிதற்று
Somnambulism	—	துயில் நடை
Insomnia	—	துயிலின்மை
Deep sleep	—	ஆழ் துயில்

பயிரைக் காப்பாற்றச் சிங்கத்தின் சாணம்

இசுரேலில் மான்கள் வயலில் புகுந்து விளைபயிரை அழித்து வருகின்றன இந்த மான்களைச் சுடக்கூடாது என்று இசுரேலில் தடைச் சட்டம் உள்ளது. மானையும் சுடக்கூடாது, பயிரையும் காக்க வேண்டும். என்ன செய்வது? சிங்கத்தின் சாணம் மான்களின் அட்டகாசத்தைக் கட்டுப்படுத்தும் என்று ஏரிக் ஈசாக்கன் என்ற விஞ்ஞானி அமெரிக்க அறிவியல் இதழ் ஒன்றில் படித்திருக்கிறார். இதைச் சோதித்தறிய டெல் அவிவ் நகர்ப் பூங்காவிலிருந்து 10. கி. கி சிங்கத்தின் சாணத்தை ஒரு சிறு லாரியில் ஏற்றிவரச் செய்தார். சாணத்தின் வாசனை தாங்காமல் லாரி டிரைவர் மிகவும் சிரமப்பட்டாராம். எப்படியோ, சாணம் வந்து சேர்ந்தது. தனது வயலைச் சுற்றி இந்தச் சாணத்தைப் பரப்பி வைத்தார். என்ன விந்தை! மான்கள் அந்தப் பக்கம் எட்டிப் பார்க்கவே இல்லை! 'ஆனால், சாணத்தின் இந்தத் தடுப்புச் சக்தி அது காயும்வரைதான். அதன் பிறகு... ? மான்கள்,மான்கள், மான்கள்! எனவே சாணம் காயக்காய ஈரச் சாணத்தைப் பரப்ப வேண்டும்.

"நன்றி: அறிவியல் பண்ணை, தமிழ்ப் பல்கலைக் கழகம்"

குயிலின் பாட்டு

K. சோமசுந்தரம், B. A., B. L.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பாணி, பண், நாதம், தாளம் முதலியனவும் இசைக்குக் கட்டுக்கோப்பாக அமைந்துள்ள இசைக்கூறுகள்.

> 'பாணியும் தூக்கும் சீரும் என்றிவை
> மாணிழை அரிவை காப்ப
> ஆணமில் பொருளெமக் கமர்ந்தனையாடி,

என்பது கலித்தொகையாகும். இங்கு 'பாணி'யென்பது தாளத்தின் முதற்கூறு: தூக்கு என்றது இடைக்கூறு: இறுதிக்கூறுதான் சீரெனப்படும். 'சீர்' என்பது தாள அறுதியைக் குறிப்பது என்று நச்சினார்க்கினியர், மதுரைக் காஞ்சி உரையில் (அடி-160) நவின்றுள்ளார். இசைக்கு ஏற்பத் தாளவரையறை செய்து பாடுதலை 'ஒத்தறுத்துப்பாடுதல்' என்பர் சேக்கிழார். தாளத்திற்கும் பண்ணுக்கும் உரியபெயர் 'பாணி' எனும் சொல், பண்டு தமிழகத்தில் வழங்கப்பட்டு வந்துள்ளதென்பது சேனாவரையர் கூற்றால் தெளியப்படும். இதனாலன்றோ பண்ணுக்கு இசை கூட்டக் கையால் தாளமிடுவது 'கைப்பாணி' என வழங்கப்படலாயிற்று.

அடுத்தபடியாக

> பண்ணே, பண்ணே, பண்ணே;
> பண்ணிற்கேயோர் பழுதுண்டாயின்;
> மண்ணே, மண்ணே, மண்ணே,

என்ற பாட்டின் இயலழகு ஈண்டு கருதற்பாலது. கண்ணன், பண்ணின் பயனாகி நிற்பதைக் கண்டறிந்த பாரதியார், பண்ணைப் பற்றிய இன்ப உணர்வினைத் தோன்றச் செய்வது நினையத்தக்கது. பண், இராகம், இசை, நாதம் என்பன ஒரு பொருட் கிளவிகள். இவைகளின் சிறப்பியல்புகள் சிலப்பதிகாரத்துச் சில பகுதிகளின் உரைகளாலும் உணரப்படும். இசையின் காரணமாயுள்ளது பண். தாளவறுதியோடு கூடிய இராகமும் பண்: இசை எழுத்தொலியை அடியாகக் கொண்டு பிறப்பதால், பண்ணுக்குக் காரணமாயுள்ளது ஓசை. பண்ணொடு பயின்று வரும் பாட்டும், பாவும் ஒரு பொருட்கிளவியாக வழங்கப்படுவதாயினும், பெயர்க்காரணங் கொண்டு அவற்றிற்குச் சிறிது வேறுபாடுகளுமுண்டு. இசைப்

பொறிக்கு இன்னோசை தரும் மெல்லிய மதுர நறுஞ்சுவைச் சொற்களும் சீர் அமைப்புகளுமுடையவை பாட்டாகும். 'பாட்டைத்திறப்பது பண்ணாலே' என்பர் பாரதியார் 'பா' என்றால் ஓசையெனப் பொருள்படும். 'பா' என்பதற்குப் பேராசிரியர் 'சேட்புலத்து இருந்த காலத்தும் ஒருவன் எழுத்தும் சொல்லும் தெரியாமல் பாடமோதுங்கால், அவன் சொல்லு கின்ற செய்யுளை இன்ன செய்யுள் என்று உணர்தற்கு ஏதுவாகிப் பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை' யென விளக்கம் பகர்வர்.

விண்ணில் ஓசையும் ஒலியும் எழுப்பிப் பறக்கும் பறவை களும், மண்ணில் வாழும் மக்களும் இயற்கையிலே இசையில் ஈடுபடுவது இயல்பு. அத்தகைய பறவைகள் விண்ணில் பறக்கும் போது பாடிக்கொண்டும், பாடும்போது பறந்து கொண்டும், தம் தம் சிறகுகளை அடித்துக்கொண்டு, அதனையே தான் ஒலியாகக் கருதி, இசை வெள்ளத்தை அமுதூற விண்ணிலும் மண்ணிலும் எங்கும் பரவ நிரம்பச் செய்கின்றன. அவை இன்பம் தேக்கிடும் தேனிசை களையும், சோகம் தவிர்க்கும் நல்லோசைகளையும் ஒலிக் கின்றன. மக்கள் பறவைகள் போன்று தம்முள்ளத்தை இசையின்பமயமாக்கி, விண்வெளியிலே பறக்கும்படி செய்து, இசையின் நாதத்தைப் பொழியும் வண்ணமாய்த் தம் இதய நிறைவைப் புலப்படுத்தி விடுகிறார்கள். இவை இரண்டிற்கும் நெஞ்சகத்தே தெய்வ இயல்பு இயற்கையாக நிலவியிருப்பதால், இவை தெய்வசக்தி கொண்டு தோன்றி விளங்குகிறது என்பது புலப்படும். இதன் விளைவால் கவலையைப் போக்கித் தளர்ச்சியை நீக்கும் அமுதக்கனற்பா உண்டாகிறதால், பாரதியார், பண்ணைத் தெய்வமாகக் கருதப்பட வேண்டு மென்பர். மற்றும், 'பண்ணில் இனிய பாடலோடு பாயுமொளி யெலாம், பாரில் எம்மை உரிமை கொண்டு பற்றி நிற்க வேண்டும்' என்ற பாரதியாரது ஆய்ந்து தெளிந்த நுட்பக் குறிப்பு எண்ணத்தக்கது. பண், இசை என்பன காரணப் பெயர்களாதலான், உயிர் உணர்வை இறையோடு ஒன்று படுத்தி இயைத்தற்கு உரியன கலைப்பண்புள்ள இசைப்பண் களாகும். ஆளுடைய நம்பி இறைவனை 'பண்ணிடைத்தமி ழொப்பாய்' என்றும், ஆளுடைய அரசும், 'பண்ணகத்தான்' என்றும் இறைவியை 'பண்ணினேர் மொழியாள்' எனவும் இசைப்பாராயினார். இறைவன் பண்ணிசையாய்த் திகழ்வதை ஆளுடைய பிள்ளையார்,

பண்ணும்பத மேழும் பலவோசைத் தமிழவையும்
உண்ணின்றதோர் சுவையும் முறுதாளத் தொலிபலவும்
மண்ணும் புல்லுயிரும் வருகாற்றும் சுடர் மூன்றும்
விண்ணும் முழுதானானிடம் வீழிம்மிழலையே'

எனப் புகழ்ந்து வியந்ததை நோக்கித் தெளிக.

பண்ணும் இசையும், காதலிருவர் கருந்தொருமித்து அன்புணர்ச்சியோடு பரம்பொருள் நிலை கொண்டு இருத்தல் போல ஒத்திருத்தல் வேண்டும். இசையிலே தோய்ந்த இதயத்தோடு பண்ணிலே களி கூட்டிப் பாடுதலால் சித்தம் தெளியும் : உள்ளம் கசிந்து கரைய உருகும் : சஞ்சலம் நீங்கி, எழுச்சி மனப்பான்மையால் மன உறுதி விளங்கும் : அல்லலால் விளையும் சோர்வு மனப்பான்மை அகலும் : சிந்தையில் செம்மை தோன்ற தெய்வ வாழ்க்கையுற்று மகிழ்வால் வாழ்ந்திடலாம். ஆத்மஞானத்திற்கு வழிகோல அடிப்படையாக வுள்ளது பண்ணிசை யாதலால், அது இதயத்தைக் கிளரச் செய்து பக்தி நெறியில் ஒடுங்கிய உள்ளத்தன்பினால் எளிதாக இறைவனை எய்தல் செய்யும். அதனால் இசை யெண்ணம் தான் கவிதைப் பண்ணாக மலர்ந்து இறையோடு உறவாடி இசைந்து நிற்கும் பண்ணிசையால் பரமானந்தம் பெற்று ஆன்ம ஞானமுற, சீவாத்மா, பரமாத்மாவுடன் அறிவு கலந்து நிற்பதாகிய வீடாம் நெறியினை மேற்கொள்ளும். அதுபோது ஆன்மா முக்திநிலை கண்டு கவலைப் பிணி தீர்ந்து அமரப் பொறி கொண்டு பொலிவுறும். பண்ணுக்கும் பண்ணிசைக்கும் பழுது ஏற்படின், அது மண்சோற்றுக்கு நிகராகி, மக்களுயிர்க்குப் பயன்படாதுபோகும். மற்றும் அப்பழுதால் பண், நிறைவு சிதைந்து இழந்தும், வழக்கற்று மண்ணாவதும் திண்ணம் என்பது பாரதியாரது உள்ளம். மற்றும் இதயம் களிப்பெய்து மாறு பண்கள் முறைப்படி பாடும் பழக்கமும் குறைப்பட்டுக் கழிந்து போகும். தூயதொருமரபுபடிபழுதறப்பண்ணிசையினை வளர்க்கும், பண்டைத் தமிழ் கண்ட நல்ல நாத முடைய யாழ் வகைகளும் மறைய, தமிழ்ப் பண்கள் பலவும் இருள் அளையில் ஒளி மாழ்கி மறைந்து, பயனின்மையால் வழக்கற்றுப் போயினமையும் பெரிதும் வருத்தத்தைச் சால விளைவிப்ப தாகும்.

அடுத்து,

புகழே, புகழே, புகழே;
புகழுக்கோர் புரையுண்டாயின்,
இகழே, இகழே, இகழே,

எனும் பாட்டின் மொழிப்பினைக் காண்குவம். புகழின்பத்தை நச்சும் அருளுடையார், பாத்தூண் பழகி உலகு புகழ ஈதல் புரிந்து பசிப்பிணியைத் தீர்ப்பது வள்ளற்றன்மையிற் சிறந்தது. இதற்கு குடிப்புகழ் பொன்றாத் துணையாகும். பல நற்குணப் பெருஞ்சிறப்புச்சால்பால் கணவனைப் பேணி, விருந்தினர் பால் அன்புச் செறிவும், வறியார் பால் அருள் நிறையும் கொண்டு நல்லறச்செய்கைகளை செம்மையுறப் புரியும் இல்லறச்செல்வி, உலகம் புகழுமாறு புரையிலாது நடந்து கொள்ளல் வேண்டும். இன்றேல், மாண்பிலாளுக்கு இகழே வந்தெய்துதல் சரதம். எனவே, புகழின்மையே இகழ்ச்சியாகும். இதனான் குடிப்புகழ், மாண்புடைய மனையாளுக்கு இன்றியமையாது வேண்டப் படுவது அறியப்படலாயிற்று.

காதலறத்தோடு காதலின்பத்தை உளங்கலந்து துய்க்கும் இல்வாழ்வோர் குடும்ப நலத்தைப் பேணி, ஈகை ஒப்புரவுவழி, அக் குடும்ப நலத்தைச் சமுதாய நலத்துக்கு உட்படுத்தினால், இல்லறப் பயனாகிய புகழ், அன்னவர்பால் தானாகவே வந்து அழகு வளர்ச்சியோடு இயல்பில் அமையும். இத்தகைய பொன்றாப் புகழைத் தவிர, இல்லறத்தார்க்கு வேறு ஊதிய மின்று. இங்ஙனம் தமக்கென முயலாது தம் வாழ்வில் பிறர்க்கு உரியராகப் புகழ்பட வாழ்வோரைப்புத்தேளுலகமும்போற்றும். எனவே அறவொழுக்கத்து அடிப்படையில் விளங்குவது புகழ். அறத்தால் வருவது புகழும் இன்பமுமே. ஆகவே, அறனோடு பட்ட புகழின்பத்துய்ப்பு. வாழ்வளித்துக் காக்கும் பகுத்தறிவு நெறியாகும். கணவன் தன் நல்லொழுக்கத்தால், தனது மனைவியின் கற்பு சிறக்க, காதலன்புறவால் கூடி இல்வாழ்வு நடத்துவதில் பிறக்கும் இன்பம் மாசற்ற அறம் வாய்ந்தது, இத்தகைய அற இன்பமே புகழுடையது. அறத்துக்குப்புறம் பாகிய வாழ்வில், நிலைத்த இன்பமிலாது வெறும் இகழே தோன்றி நிற்பது உறுதி.

மக்களாய்ப் பிறந்தவர்கள், யாவருக்கும் பயன்படும் வண்ணம், கல்வி, ஆண்மை, ஈகை, ஒப்புரவு நன்னெறி முதலிய வற்றால் புகழுடன் வாழவேண்டும். இல்லையேல் அன்னவரது வாழ்வின் எழில் இகழப்பட்டுச் சிதைந்துவிடும். பசிப்பிணி நீங்க வயிறார உண்பவர் வாழ்த்துதல் புகழின் பாற்படும். இதன்வழி, புகழ், பசிபோக்குவார் மேல் நிற்கும் தன்மைத்து இத்தகைய புகழே ஈட்டப்படல் வேண்டும். உண்டி கொடுத் தோர் பசிப்பிணியினை நீக்குதலான், அன்னவர் உயிர் கொடுத் தாராவர். உயிர்களெடுத்த ஊனுடம்பு உணவின் பிண்டம்.

'உணவின் பிண்டம் உண்டி முதற்றாகலின் ஈதல் சிறந்தது என்பர்' பரிமேலழகர். இத்தகைய தலை சிறந்த ஈதலறம் பசிப் பிணியுற்றாரின் உடலகத்தே விளங்கும் உயிரை நிலை பெறச் செய்து அதன் உள்ளியல்புகளாகிய அறிவு உணர்வு ஆகிய வற்றை தெளிய விளக்கமுறும்படி கிளரச் செய்து விடுகிறது. இக்கிளர்ச்சியால் உள்ளம் எழுச்சியடையவே, ஈதலறம் பிறவி யின் விழுப்பயனை இறைவனது திருவருளால் பெறும் வகை யினையும் புலப்படுத்திவிடுகிறது. முடிவில் இத்தகைய அறம் இறப்பை இருப்பாக ஆக்கிப் புகழுடம்பை நிலை நிறுத்துகிறது. எனவே ஈகையால் இசைப்பட வாழும் நல்லுயிர் இம்மையில் புகழும் மறுமையில் துறக்கவின்பமும் பெறுதல் உறுதி. எனவே இவ்வுலகம் புகழ்ந்தவை போற்றி உவந்து ஈதலே சாலவும் நன்று.

அறநெறியின் பாற்பட்ட ஈகையால் வருவதே பெரும் புகழ். ஈவார் மேல் புகழ் நிற்றலால் புகழுக்காக ஈதல் ஒரு வரன்முறை: யாவரும் போற்றற்குரிய ஒரு நெறிமுறை. ஆகவே பிறருடைய பசிப்பிணியையும் துன்பத்தையும் ஈகையால் மாற்றும் ஆற்றலுடைய அருளாட்சியார்க்கு பொன்றுந் துணையும் இன்பப் புகழுண்டு. பொருளுடைமை வழி பயன் கொள்ளும் அறஞ்சார்ந்த அறிவுடைமையே புகழை யீட்டும். ஈதலறிவின் மேற்றாய் விளங்கும் புகழிலையேல், வாழ்வு தாழ்வுற்று இழிவுபடும்: மற்றும் கெடும். ஈதலிலையேல், கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலாயவை இன்மைப்பட்டு, இகழப் படும். மானத்தினை மாளச்செய்யும் பசிப்பிணி, சான்றோர் பழிக்கும் வினைகளை இயற்றச் சொல்லும்: நல்லறிவினை அகற்றும்: உயிர்க் கேட்டினை விளைவிக்கும். பசியைத் தணிக்கும் உண்டி இன்மை பொருட்டு அரிய நல்லுயிர் நாணால் மாய்வதை விரும்பாத பாரதியார் 'தனியொருவர்க்கு உணவு இலதேல், இச்சகத்தினை அழிப்போம்' எனக்கவன்று வஞ்சினம் மொழிந்து கொடைப் பண்பில்லாரைக் கடிந்து பழிப்பா ராயினார்.

"சாத்தனாரின் உவமைத் திறன்"

டாக்டர் ஏ. என். பெருமாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

என்ற செய்தி கூறப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் இந்திர விழாவுக்கான செய்திகளும் மணிமேகலையிலுள்ள செய்திகளும் மாறுபட்டிருப்பதை நோக்கி இக்கருத்தை இன்னும் சிந்திக்கலாம். 'இடி' என்ற உவமை கருத்தாழம் மிக்கதாக இங்குப் பயன்படுத்தப்பட்டிருப்பதை விளக்கும்.

இவ்வாறு விரிந்த பொருளைச் சிறப்பாகவும் பொருத்தமாகவும் தம்முள் அடக்கிக் கொண்டுள்ள பல உவமைகளைப் பெற்று மணிமேகலை இலக்கியப் பண்பில் உயர்வடைகிறது.

உவமைப் பொருள்கள்

உவமை உருவாக்கப் பொருள்கள் பலவகையாக அமைந்து சாத்தனாரின் பரந்தப்பட்டறிவினையும் சிந்தனை உணர்வினையும் விளக்குவதாக உள்ளன. அவை, இயற்கை, செயற்கை, இயற்கைப் புனைவு, செயல், வரலாறு, புராணம், உணர்வு போன்ற பல இயல்புகளுடன் உருவாக்கப்பட்டுள்ளன. உருவமுடைய ஞாயிறு. மதி, மயில், பாம்பு, மலர், வண்டு முதலியனவும் உருவமற்ற ஒலி, ஒளிக்கதிர், மலர்நாற்றம் போன்றவையும் உணர்வுகளான இழப்பு, புழுக்கம், நோவு ஆகியவையும் உவவைப் பொருள்களாக வந்துள்ளன.

கற்பனை ஆற்றல் கொண்டு இயற்கைப் புனைவாகத் தற்குறிப்பேற்ற அமைப்பில் உவமை காட்டியிருப்பது சாத்தனாரின் படைப்புத் திறனைப் வெளிப்படுத்துவதாகும். உவமைக் காட்சியாக ஒன்றைக் காட்டி இத்தகைய இலக்கியத் திறமையைப் புலப்படுத்துவது நன்கு அமைந்துள்ளது.

> "கோங்கலர் சேர்ந்த மாங்கனி தன்னைப்
> பாங்குற விருந்த பல்பொறி மஞ்ஞையைச்
> செம்பொற் றட்டில் தீம்பா லேந்திப்
> பைங்கிளி யூட்டும் பாவையா மென்று" (19, 67-70)

கண்டு களித்திருப்பது இலக்கியப்புனைவாகப் படைத்துத் தரும் உவமையாக அமைந்துள்ளது. பாலூட்டும் செய்கைத் தற்குறிப்பேற்றமாக இருப்பதை அறியலாம்.

வரலாற்று உண்மை விளங்க ஓர் உவமையைப் பெருமிதம் காட்டிப் படைத்துள்ளதைக் காணலாம். இந்திர விழா நாளில் வானுலகுவறிதாக வானவர் அனைவரும் புகாரில் கூடியதைக் கரிகால்வளவன் வடநாட்டுக்குப் படையெடுத்துச் சென்ற நாளில் பூம்புகாரில் தேவர் கூடி வந்தமைக்கு ஒப்புமை காட்டிச் சாத்தனார் விளக்குகிறார்.

"பல்வேறு தேவரும் இப்பதி படர்ந்து
மன்னன் கரிகால் வளவன் நீங்கியநாள்
இந்நகர் போல்வதோர் இயல்பினதாகி" (1, 38–40)

என்று கூறுவதின் வாயிலாக வரலாற்றுப் புகழ்மிக்கக் கரிகால் வளவனின் வடநாட்டுப் படையெடுப்பு குறிப்பிடப் பெற்றுள்ளது. அனைவரும் பெருமையாகக் கருதும் வரலாற்றுத் தடமாக இந்தப் படையெடுப்பு விளங்குவதை இந்த உவமையின் வாயிலாக அறியலாம்.

குருகுபெயர்க் குன்றங் கொன்றோ னன்னநின்
முருகச் செவ்வி ..." (5, 13 - 14)

என்பதில் முருகக் கடவுள் பற்றிய புராணச் செய்தியையும்,

"குரங்குகொணர்ந் தெறிந்த நெடுமலை யெல்லாம்
அணங்குடை யளக்கர் வயிறுபுக் காங்கு
இட்ட தாற்றாக் கட்டழற் கடும்பசி" (17, 11 13)

என்பதில் இராமயணக் கதைக் குறிப்பையும் சாத்தனார் உவமைகளாகக் கொண்டு மணிமேகலை காலத்தில் இத்தகைய புராண இதிகாசங்களைப் பற்றி மக்களுக்கு இருந்த அறிவைப் புலப்படுத்துகிறார்.

இயற்கைச் செயல்கள் மானிடச் செயல்களுடன் ஒப்பாவதைச் சில உவமைகள் விளக்குகின்றன. உதயகுமாரன் வீதியில் தேரேறி வருவதை,

"ஓடுமழை கிழியும் மதியம்போல
மாட வீதியில் மணித்தேர் கடைஇ" (4, 75 - 76)

எனக் கூறுவது மனிதச் செயலை மதியின் போக்குடன் பொருத்திக் காட்டுவதாகும். தேரின் வேகத்தை விளக்கவும் இவ்வுவமை கைகொடுத்துள்ளது.

"கதிர்மண்டிலம் .... தண்கதிர்
வெள்ளிவெண் குடத்துப் பால்சொரி வதுபோல்
கள்ளவிழ் பூம்பொழில் இடையிடை சொரிய"
(6, 6 - 8)

என்று குறிப்பிடுவதில் மனிதச் செயல் உவமையாகி இயற்கையின் செயலை விளக்குகிறது. கவிஞரின் கண்ணுக்கு அரிய விருந்தாகும் இந்தக் காட்சி அனைவருக்கும் எளிதாகப் புரியும் தரமாக இந்த உவமை பயன்படுத்தப்பட்டுள்ளது. காட்சியை விடவும் கற்பனை மிகுதியாக அமைந்து சமைக்கப் பெற்ற உவமையாக இது தோன்றுகிறது.

உணர்ச்சியை உணர்சியால் விளக்க விரும்பும் சாத்தனார் அனைவரும் கற்பனையால் அறியத் தக்க ஓர் உணர்ச்சியைத் துணையாகக் கொண்டு உவமை அமைத்துள்ளார்.

"நன்மணி யிழந்த நாகம் போன்றவள்
தன்மகள் வாராத் தனித்துய குழப்ப"
(7, 131—132)

என்று மணிமேகலை வராததினால் மாதவி வருந்தியதை நன்மணியை இழந்து வருந்தும் நாகத்துடன் ஒப்பிட்டுக் காட்டுகிறார். அரும்பொருள் இழந்து வருந்தும் மனித உணர்வைப் பாம்பின் உணர்வுக்கு ஏற்றி இந்த உவமை புனையப் பட்டுள்ளதை உணரலாம். பாம்புக்கு இத்தகைய உணர்வு உண்டா என்ற வினாவை எழுப்பாமலேயே கவிஞரின் கருத்தை எளிதாகப் புரிந்து ஏற்றுக் கொள்வதனால் இவ்வாறு அமைக்கப்படும் உவமைகள் சிறப்பாகவும் கலைத்தன்மை உடையதாகவும் கருதப்படுகின்றது.

ஒலிகளைப் பற்றிய உவமைகள் பொருள் பொலிவு கொண்டு விளங்குகின்றன. கடலின் ஒலி இரங்கலுக்கு உரியதாகக் கருதப்படுவது. சக்கரவாளக் கோட்டம் அவலத்தின் மொத்த இருப்பிடமாகவும் அச்சத்தின் கொள்கலமாகவும் உள்ளது. அங்கு ஒருவித ஒலி கேட்கிறது. அது என்றும் நின்று அறாத ஒலியாக அமைகிறது. அதனை,

"நன்னீர்புணரி நளிகட லோதையின்
இன்னா இசையொலி என்றுநின் றறாது"
(6, 78—79)

என்று சாத்தனார் கூறுகிறார். துன்பவுணர்வும் இசைத் தன்மையும் இணைந்த ஒலிக்குக் கடலொலி உவமை ஆவது பொருத்தமாக உள்ளது.

ஆபுத்திரன் அமுதசுரபி ஏந்தி அனைவருக்கும் உணவு ஊட்டும்போது அங்கு எழும் மக்களின் ஒலியை விளக்கும் கவிஞர்,

"பழுமரத் தீண்டிய பறவையின் எழூஉம்
இழுமென் சும்மை இடையின் றொலிப்ப
14, 26—27)

இங்கு இன்பமும் ஆவலும் கொண்ட மக்கள் ஒலியை 'இழுமென் சும்மை' என்று கூறும்படியாகப் பழுத்த மரத்தைக் கூடியுள்ள பறவைகளின் மனநிறை ஒலிக்கு ஒப்பிட்டுக் - காட்டுகின்றார். இரு உவமைக்கும் ஒலியைக் கொண்டு துன்பத்தையும் இன்பத்தையும் வேறுபடுத்திக் காட்டும் தன்மை உணர்ந்து சுவைக்கத்தக்கன.

உய்த்தறிய வேண்டியதை உணர்பொருளால் விளக்கும் திறனைக் காண முடிகிறது. மனிதனின் நல்லறம் பலன் விளைவிக்கும் இயல்பை விளக்குவதற்காக,

"சலாகை நுழைந்த மணித்துளை அகவையின்
உலாநீர்ப் பெருங்கடல் ஓடா தாயினும்
ஆங்கத் துளைவழி உகுநீர் போல
ஈங்கு நல்லறம் எய்தலும் உண்டென" (12, 66 - 69)

சிறுதுளை வழி சின்னீர்க் கசிந்து ஒழுகுவதை உவமை காட்டியுள்ளார். துளைக்குத் தக்கவாறு நீர் புகுந்து பாய்ந்து வழிவது போன்று அறத்துக்குத் தக்கவாறு பயன் விளையும் என்று தெளிவாகக் காட்டப்படுகிறது.

இதே போன்ற இன்னொரு உவமை மேலும் சிந்தனைக்கு உரியதாக உள்ளது. இதில் புத்தர் உலகில் தோன்றி அறம் வழங்கும் தன்மை மிக நுணுக்கமாக விளக்கப்படுகிறது.

"பெருங்குள மருங்கில் சுருங்கைச் சிறுவழி
இரும்பெரும் நீத்தம் புகுவது போல
அளவாச் சிறுசெவி யளப்பரு நல்லறம்
உளமலி உவகையொ டுயிர்கொளப் புகூஉம்"
(12, 79-82)

கொள்வதற்குத் தக்கவாறு நிறைபயன் மிக்கமாக நல்லறம் மனமகிழத் தரப்படுவதற்கு இவ்வுவமை பயன்படுத்தப் பட்டுள்ளது. அறத்தின் மொத்த இருப்பாகிய புத்தர் நிறைநீர்க் குளமாக அமைகிறார். அவருடைய முறைப்படுத்திய அறைவுரை நீராக அமைகின்றது. நீர் சுருங்கை வழிசென்று பயன்படுவதுபோல புத்தரின் அறவுரை செவிவழிச் சென்று உள்ளத்தில் நிறைந்து மக்களுக்கு நல்ல சிந்தனைகளை ஊட்டுகின்றன. தேவைக்கும் தகுதிக்கும் தக்கவாறு வரையறுத்துத் தரப்படும் அறக்கோட்பாட்டு முறைகள் குளத்தில் கட்டப்பட்டுள்ள மடைகளுடன் ஒப்பிட்டுள்ளது மிகப் பொருத்தமுடையதாகும். கட்டுப்பாட்டின் தேவை இங்கு குறிப்பாக உணர்த்தப்படுகிறது. கட்டற்ற வெள்ளம் கழனிக்கு உதவாது என்பதை நன்கு உணர்ந்து இந்த உவமையின் சிறப்பை அளவிட வேண்டும். நன்கறிந்த நடப்புச் செயலைக் காட்டி அறிய வேண்டிய நுட்பக் கருத்தைச் சாத்தனார் எளிதாக விளக்கிவிடுகிறார்.

துளக்குறு மயிலின் உணர்வு (4, 86) சுதமதியின் வருத்தத்துக்கும் வலையொழி மஞ்ஞையின் விடுதலை உணர்வு (21, 189) மணிமேகலையின் மனமயக்கு ஒழிந்த நிலைக்கும் நன் மணி இழந்த நாகத்தின் உணர்வு (24, 195) கிள்ளி வளவன் மகளை இழந்து மனம் நோவதற்கும் தாயொழி குழவியின் நிலை (25, 111) அறமாகிய பற்றுக்கோடு இன்றி உழலும் உலக மக்களுக்கும் வலையிடப்பட்ட மானின் உணர்வு (13, 32) பலி செய்வதற்காகப் பிடித்துக் கட்டப்பட்டுள்ள பசுவின் அவல நிலைக்கும் கூறப்பட்டவை மனித உள்ளத்து உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு சிந்திக்க வேண்டியவை.

கொள்கை விளக்க உவமைகள்

சாத்தனாரின் உவமைகள் வாயிலாகப் பௌத்த சமயக் கொள்கை உலகியல் வாழ்க்கைக் கொள்கை ஆகியவை ஓரளவு விளக்கம் பெற்றுள்ளன. வெளிப்படையாகவும் மறைநிலையாகவும் கொள்கைகளைச் சுட்டிக் காட்ட உவமைகளைப் பயன்படுத்தியுள்ளதாகத் தோன்றுகிறது.

வாழ்க்கை, காரண காரியங்களுக்கு உட்பட்டது என்பது பௌத்தக் கொள்கை. சில நிகழ்வுகளின் காரணங்கள் எளிதில் புலனாகாது. அடக்கமாக இருக்கும். ஆனால் அவை தோன்றும் காலத்தில் தோன்றி அனைவருக்கும் புரியும் பொருளாகிவிடும்,

மணிமேகலை இளமையில் தாய் மாதவியால் துறவுபூணப் படுகிறாள். அதன் காரணம் அறியப்படாத ஒன்றாக இருக்கிறது. அதனை விளக்க விரும்பிய சாத்தனார்,

"மாமலர் நாற்றம் போன்மணி மேகலைக்கு
ஏது நிகழ்ச்சி எதிர்ந்துள தாகலின்" (3, 3-4)

என்று உவமை காட்டி விளக்குகிறார்.

நக்க சாரணருக்குச் சாதுவன் அறிவுரை கூறும் நிலையில்,

"பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது" (16, 86-87)

என்று சொல்வது வெளிப்படையான கொள்கை விளக்கமாக உள்ளது.

புரிவதற்குக் கடினமான சமயக் கொள்கைகளை இயன்ற அளவுக்கு எளிமைப்படுத்தி விளக்க நன்கு அறிந்த உவமைப் பொருள்கள்கள் பயன்படுத்தப்படுகின்றன.

"எங்குமா யேகாந்த மல்ல மின்போல்
அநித்தமாய்ச் செயலிடைத் தோன்றாதோ
கடம்போல்
அநித்தமாய்ச் செயலிடைத் தோன்று மோவெனல்
உபயைக தேச விருத்தி யேது" (29, 251—254)

மின்னல், கடம் ஆகியவற்றின் அழிவுத் தன்மையின் வேறுபாட்டைப் புலப்படுத்திக் காட்டி உபயைக தேச விருத்தியை விளக்கச் சாத்தனார் பயனுடன் விரும்பியுள்ளார். இவ்வாறு விபக்கைக தேச விருத்தி, விருத்த வியபிசாரி திருந்தாவேது முதலிய பல பௌத்தக் கொள்கைகள் உவமைகளைக் கொண்டு விளக்கப்படுகின்றன.

சிறைச்சாலை அறச்சாலையாகியதை விளக்கும்போது ஒரு பௌத்தக் கொள்கையினை அதற்கு உவமையாக்கித் தன் சமயப் டணிக்குச் சாத்தனார் ஒரு கல் எடுத்து வைத்து விடுகிறார்.

"நிரயக் கொடுஞ்சிறை நீக்கிய கோட்டம்
தீப்பிறப் புழந்தோர் செய்வினைப் பயத்தான்
யாப்புடை நற்பிறப் பெய்தினர் போல" (20, 2-4)

என்பதில் நரகமாக இருந்த இடம் துறக்க நிலைக்கு மாறியதை நினைவுபடுத்துவதின் குறிப்பையும் உவமையாகக் பயன் பட்டுள்ள கொள்கையின் பொருள் சிறப்பையும் நன்கு கண்டு உணர வேண்டியதாகும்.

வாழ்வியல் உண்மைகளும் உவமைகள் வாயிலாக வெளிப் படுத்தப்பட்டுள்ளன. தன்குறை காட்டி நிறை விளக்கும் சான்றோரின் மறைவற்ற மதிநலத்தை மறுவுடைய மதியின் தோற்றத்துக்கு உவமையாக்கும் சாத்தனாரின் அறிவாக்கத் திறன் சிறப்பாகவே காணப்படுகிறது.

''வந்து தோன்றிய மலர்கதிர் மண்டிலம்
சான்றோர் தங்கண் எய்திய குற்றம்
தோன்று வழி விளங்குந் தோற்றம் போல
மாசறு விசும்பின் மறுநிறம் கிளர'' (6, 2-5)

ஒளி சிந்தித் திகழ்ந்துள்ளது. குற்றம் மறைக்கும் குணக் கேட்டையும் மாசு மறையா மனித மாண்பையும் விளக்கும் வாழ்வியல் ஓவியமாக இந்த உவமை அமைந்துள்ளது.

பத்தினிப் பெண்டிர் காப்புக்கடை கழியாதவர். கணவன் இறப்பின் உலக வாழ்வைத் துறந்து தீப்பாய்ந்து மடிவர். இது சாத்தனார் காலத்து வழக்கம். நெருப்பையும் விருப்பாக ஏற்கும் தன்மையுடைய பத்தினிப் பெண்களின் மன இயல்பைக் காட்ட,

''நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்'' (2, 45)

என்று கூறப்பெற்றுள்ளது. உண்மைக்கும் உணர்வுக்கும் நேர் மாற்றப் பொருள் கொடுத்துக் கொண்ட கொள்கைக்கு வலிமை தேடும் பாங்கை இந்த உவமை அமைப்பில் பார்க்கலாம். இதே போன்று ஆதிரையின் கற்பின் திண்மையும் (16, 46) முதுகுடிப் பிறந்த பத்தினிப் பெண்டிரின் தன்மையும் (18, 13) மேலும் காப்பியத்தில் விளக்கப்பட்டுள்ளன. மூன்று இடங்களில் ஒரே மாதிரியாக கூறியுள்ளதைக் காணும்போது இத்தகைய மனப்போக்கு அக்கால வாழ்க்கைக் கொள்கையாக உறுதிப் படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது.

கற்புடைய மாதருக்குச் சமுதாயத்தில் பலத்த கட்டுப் பாடுகள் இருந்தது போல் பெரும் மதிப்பும் இருந்துள்ளதைச் சில உவமைகளைக் கொண்டு நன்கு அறிய முடிகிறது,

தீயோரைத் தாக்கிக் கொல்லும் தன்மையுடைய மாபெரும் பூதம் மாருதி என்ற கற்புக்கரசியிடம்,

"நிறையுடைப் பெண்டிர் தம்மே போலப்
பிறர்நெஞ்சு சுடூஉம் பெற்றியு மில்லை" (22, 66-67)

என்றும்,

"பெட்டாங்கு ஒழுகும் பெண்டிரைப் போலக்
கட்டா துன்னையென் கருந்தொழில் பாசம்" (22, 70-71)

என்றும் கூறுவது அவர்களுடைய ஆற்றலையும் புகழையும் புலப்படுத்துவதாகும். பெண்களுக்குக் கற்புடைமை வாழ்க்கையின் அருங்கொள்கையாக இருந்தமை இவற்றால் நன்கு விளங்கும்.

பருவ காலத்தில் பெண்களுக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்பதை அறிவுறுத்தும் வாயிலாகக் 'குமரி மூத்தவென் பாத்திரம்' (14, 77) என்ற உவமை படைக்கப்பட்டுள்ளது. இல்லையாயின் அவர் வாழ்க்கைப் பயனை இழந்து விடுவாள்.

பரத்தையரின் வாழ்க்கை இதற்கு நேர்மாறாக இருப்பதைக் காணமுடிகிறது. ஆணின் மறைவால் பரத்தையின் வாழ்வு மாறாது என்பதைக் காட்ட,

"பாண்மகன் பட்டுழிப் படூஉம் பான்மையில்
யாழினம் போலும் இயல்பினம்" (18, 17-18)

என்ற உவமை பரத்தை ஒருத்தியின் வாய்மொழியாகத் தரப்பெற்றுள்ளது. பாணன் இறப்பினும் அவனுடைய யாழிசைக் கருவிகள் பாழாவதில்லை. இன்னொருவன் கையால் இசைக்கப்படும். யாழினம் பலவகையாலும் கலைத் தன்மையுடையன. பரத்தையரின் கலைத் தன்மையினை இந்த உவமை விளக்குவதுடன் இசைப்போருக்கெல்லாம் இணங்கும் யாழைப் போன்ற இயல்பினையும் சுட்டுவதாகக் கருதலாம்.

மேலும், பொதுமகளிர் செல்வமுடையோரைச் சேர்ந்து வாழும் இயல்புடையவர். பொருளற்றவரைப் பொருந்தி வாழவே மாட்டார்கள். ஆகையால் இந்த இயல்பை விளக்கும் தரமாக,

"வறும்பூ துறக்கும் வண்டு போல்குவம்" (18, 20)

என்ற உவமை கூறப்பட்டுள்ளது. மலருக்கு மலர் தாவும் தன்மை, மதுவற்ற மலரை நாடாமை போன்ற வண்டின் இயல்புகளைப் பரத்தையருடன் பொருத்திக் கண்டு அவர்களுடைய வாழ்க்கை முறையினை அறியலாம்.

போராடும் வலிமை ஆண்களுக்கே உண்டு என்பதனை உணர்த்தும் போக்கில் மணிமேகலை உதயகுமாரனிடம் 'மண்டமர் முருக்குங் களிறனையார்' (18, 140) என்று கூறுகிறாள், மணிமேகலையிடம் காதலுற்ற உதயகுமாரன்,

"நீங்கா னவளை நிழல்போல் யாங்க ணும்"
(22, 185)

என்று கூறப்பட்டுள்ளது. இதில் அவனுடைய பற்றுள்ளமும் காதல் செயலும் தோன்றுகின்றன. மணிமேகலையின் நிழல் உதயகுமாரனுக்கு உவமிக்கப்பட்டிருப்பதனால் அவருடைய மனத்தில் ஏற்பட்டுள்ள சலன உணர்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளதோ என்று கருதுவதற்கும் இடமுள்ளது. ஆண்களின் வீரம், காதல் ஆகிய உணர்ச்சிகளை உவமைகளைக் கொண்டு விளக்கச் சாத்தனார் முயன்றுள்ளதாக நினைக்கலாம்.

சமயக் கொள்கைகளை முக்கியமாக விளக்கக் கருதும் காப்பியத்தில் வாழ்க்கைக் கொள்கைகளுக்கும் தகுந்த இடம் கொடுத்து அனைவருக்கும் பொதுவான உணர்சசி இயல்புகளை முறையாக விளக்கி இலக்கியச் சிறப்பு கொடுத்துள்ளதைச் சாத்தனாரின் உவமைகள் வழியாக நன்கு உணரலாம்.

தொழில்பற்றிய குறிப்புகள்

கடல் வாணிபம் முக்கிய தொழிலாக இருந்திருக்க வேண்டும். கலம் செலுத்திக் கடல்மேல் செல்லல், புயலால் கலமுடைதல், விலைமிக்கப் பொருள்களின் இழப்பு, தனித்துயர் உழந்து தனித்துக் கரையேறுதல் போன்ற குறிப்புகள் உடைய ஐந்து உவமைகள் பொருள் பொதிவுகளாகக் காப்பியத்துள் இடம்பெற்றுள்ளன.

"மீயான் நடுங்க நடுவுநின் றோங்கிய
கூம்புமுதன் முறிய வீங்குபிணி யவிழ்ந்து
கயிறுகால் பரிய வயிறு பாழ் பட்டாங்கு
இதைசிதைத் தார்ப்பத் திரைபொரு முந்நீர்

இயங்குதிசை யறியா தியாங்கணு மோடி
மயங்குகா லெடுத்த வங்கம் போல" (4, 29-34)

என்று உவமை கொடுங்காற்றுக்கு இலக்காகிக் கடலுக்குள் அலக்கழியும் கலத்தில் அவலநிலையை அனுபவத் தெளிவாக விளக்குவது இக்கருத்தை உறுதிப்படுத்துவதாக அமையும். உதயகுமாரனின் நெஞ்சப் படப்படப்பையும் முறையின்றிச் செலுத்தப்படும் தேரின் வெம்போக்கையும் இதனால் சாத்தனார் விளங்குகிறார்.

பயிர்த்தொழில் குறிப்பும் வேட்டையாடல் செய்தியும் உவமைகளின் வழியாகத் தெரியப்படுத்தப் பட்டுள்ளன. கந்த சாலியுன் வித்து களர் நிலத்தில் விழுவது (10, 46-47), பெருங்குள மருங்கில் சுருங்கைச் சிறுவழி (12, 79), வேயுங் கரியும் வெங்கோடையில் கருவி மாமழை தோன்றியது 17, 91—92) போன்றவை பயிர்த் தொழிலைச் சுட்டும். வலையிடைப்பட்ட மான் (13, 32) வலையொழி மஞ்ஞை (21, 189), புதுக்கோள் யானை வேட்டம் (18, 168) ஆகியவை வேட்டைக் குறிப்பைக் கொண்டுள்ள உவமைகள். ஊதுலைக் குருகு (2, 43), பறாஅக் குருகு (19, 23) போன்றவை கொல்லன் தொழிலைச் சுட்டும்.

கலைகள் பற்றிய செய்திகள்

உவமைகளைக் கொண்டு கலைகள் பற்றிய சில செய்திகளைத் தர சாத்தனார் தவறவில்லை.

"ஆடுங் கூத்தியர் அணி" (12, 51)

என்பதில் கூத்துக்கலை பற்றியும் 'புனையா ஓவியம்' (16, 131 ! 28, 88), பற்றிக் கூறுவதில் ஓவியக் கலையும் 'யாழினம்' (18, 18) என்று குறிப்பிடுவதில் இசைக் கலையும் குறிப்பிட்டு அக்காலக் கலைகள் பற்றிச் சிறிதளவு அறிய இந்த உவமைகள் வாயிலாகக் கவிஞர் வழியமைத்துள்ளார்.

சிறப்புச் செய்திகள்

பலவகையாக உவமைகள் மணிமேகலையில் அமைக்கப் பெற்றுள்ளன. செங்கயல் நெடுங்கண் (4, 101) மதிமுகம் (5, 84) என்பவற்றை வழிவழிப் பயன்பாடு கருதி, பதிவு உவமைகள் என்று கூறலாம், உண்மையாக இருப்பதையும்

நடப்பதையும் உணர்வதையும் கொண்டு அல்லாமல் கவிஞர் தன் கற்பனையால் கவியுரிமை கொண்டு படைத்துக் காட்டும் உவமைகளும் உள்ளன.

"தாமரை தண்மதி சேர்ந்தது போல" (3, 12)

என்று கூறுவது நடப்பியல்புக்கு அப்பாற்பட்டதாக இருப்பினும் அனைவரும் புரியும் தரமாகப் பொருள் விளக்கத் துணையாக அமைவதனால் இல்பொருள் உவமையாக ஏற்றுக் கொள்ளப் படுகிறது. உருவில்லா மின்னலுக்கு உருக்கொடுத்து தெய்வத் திருமகள் ஒருத்தியை,

"உருவு கொண்ட மின்னே போலத்
திருவி லிட்டுத் திகழ்தரு மேனியள்" (6, 9—10)

என்று இல்பொருளுவமை படைத்துள்ளார். மேலும் சற்று விளக்கமாக மணிமேகலை மணிபல்லவத்துப் புத்தபீடிகையை விழுந்து வணங்கின நிலையை,

"கொடிமின் முகிலொடு நிலஞ்சேர்ந்தென்ன" (9,6)

என்று கூறுவதிலும் இல்பொருளுவமை கற்பனை ஆற்றலுடன் காணப்படுகிறது. இதனைச் சிலப்பதிகாரத்தில் கண்ணகி விழுந்த நிலையை விளக்கும் பகுதியான, 'திங்கள் முதிலோடுஞ் சேணிலங் கொண்டேன்' (18, 31) என்ற அடியுடன் ஒப்பிட்டு இல்பொருள் உவமைப் படைப்புத் திறனை அளவிட்டுக் காண முயலலாம்.

1. "சிறையு முண்டோ செழும்புனல் மிக்குழீஇ
நிறையு முண்டோ காமங் காழ்க்கொளின்"
(5, 19 20)

என்பன போன்ற எடுத்துக் காட்டு உவமைகளும் நன்கு அமைந்துள்ளன.

உவமையை விலக்கும் நிலையில்,

"காய்வேல் வென்ற கருங்கயல் நெடுங்கண்"
(18, 75)

என்ற அமைப்பிலும், ஏது காட்டி விலக்கும் நிலையில்,

"காரலர் கடம்பன் அல்ல னென்பது
ஆரங் கண்ணியிற் சாற்றினன் வருவோன்"
(4, 49 - 50)

என்ற அமைப்பிலும் உவமைகள் காணப்படுகின்றன.

2. சமயக் கொள்கைகளைத் தெளிவுபடுத்தி எளிதாகப் புரியவைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன்:

"கனலிற் புகைபோல் காரிய கருத்தே" (29, 54)

என்றும்,

"கைந்நெல்லி போலெனல்" (29, 83)

என்றும் பழமொழிகளை உவமைகளாக மாற்றி அமைக்கப் பட்டுள்ளன.

பொருளுக்கு அணுக்கமாக அமையாமல் முற்குறிப்பாக அமைந்து உவமைக்கு ஒப்பாகப் பொருள் விளக்கத்தைச் சிறப்பாகக் காட்டும் ஓர் இடம் சாத்தனாரால் மிக நுணுக்க மாகப் புகுத்தப்பட்டுள்ளது. உவவனத்தில் மணிமேகலையும் சுதமதியும் வரும்போது ஓர் இயற்கைக் காட்சியைச் சுதமதி சுட்டிக் காட்டுகிறாள்.

"செங்கயல் பாய்ந்து பிறழ்வன கண்டாங்கு
எறிந்தது பெறாஅ திரையிழந்து வருந்தி
மறிந்து நீங்கு மணிச்சிரல் காணென" (4, 22—24)

குறிப்பிட்ட நிகழ்ச்சிக்குச் சற்றுப் பின்னர் உதயகுமாரன் மணிமேகலையைக் கவர்ந்துகொண்டு செல்ல விரைந்து வருகிறான். அவள் பளிக்கறை புகுந்து அவன் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்கிறாள். உதயகுமாரன் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கிறான். இயற்கைக் காட்சியிலுள்ள செங்கயல் நிலையில் மணிமேகலையும் மணிச்சிரலின் ஏமாற்ற நிலையில் உதயகுமாரனும் இருப்பதை ஒப்புமைப் படுத்தப்பட்டு இணையாமல் குறிப்பாக இணைத்திருப்பதைக் காணலாம். இதனைப் பின் நிகழ்வுக்குப் பொருந்தும் கவிஞரின் முற் குறிப்பாகக் கருதுவது தவறாக அமையாது.

சாத்தனார் கொள்கை விளக்கத்துக்காகவே மிகுதியான உவமைகளைக் கையாண்டுள்ளார். சிறப்பாகப் பௌத்த சமயக் கொள்கைளை எளிதாக விளக்குவதற்கு அனைவரும் நன்கு அறியத்தக்க உவமைகளைப் பயன்படுத்தி அவருடைய காப்பிய நோக்கத்தைப் புலப்படுத்துகிறார். சுற்றுச் சூழலை யும் மனித மனத்தின் இயல்புகளையும் நன்கு உணர்ந்து தக்கவாறு கருத்துத் தெளிவுகளை உவமைகள் வாயிலாகப் புலப்படுத்திக் காட்டித் தன்னுடைய படைப்புக்கு ஏற்றம்

தேடியுள்ளார். பல்வேறு பொருள்களைக் கொண்டு பலவகை யான முறைகளில் உவமப் படிவங்களை அமைத்துச் சாத்தனார் தன்னுடைய இலக்கியப் படைப்பு ஆற்றலை நயமாகக் காட்டி யுள்ளார்.

அடிக்குறிப்புக்கள்

1. மணிமேகலை, ந.மு வேங்கடசாமி நாட்டார் உரைக் குறிப்பு, கழக வெளியீடு, சென்னை, பதிப்பு 1969, ப.4.
2. மேற்படி, ப. 494.

மின்சாரத்தை நாம் எப்படி பயன்படுத்துகிறோம்?

மின்சார வசதி நாட்டுப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் விரிவாகிக் கொண்டிருக்கிறது. அதற்கேற்ப நாம் பயன்படுத்தும் மின்சாதனங்களின் வகைகளும் பெருகிக்கொண்டிருக்கின்றன. ஆனால், மின்கட்டண ரசீது வரும்போது நம்மில் பலருக்கு அதிர்ச்சியாக உள்ளது. மாதம் 70, 80 யூனிட் செலவாகி யிருப்பதாகவோ 70, 80 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டி யிருப்பதாகவோ அது தெரிவிக்கிறது. பிறகு மீட்டரைப் பார்த்து யூனிட் செலவாகியுள்ளதை அறிந்து அமைதிப்படுகிறோம். ஆனால், நாம் பயன்படுத்தும் பலவகை மின்சாதனங்கள் ஒரு யூனிட் மின்சாரத்தைச் செலவழிக்க எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்கிறது என்பது நம்மில் பலருக்குத் தெரியாது. அதன் விவரம் கீழே,

மின்சாதனம்.		1 யூனிட்டுக்கு ஆகும் நேரம். மணி.	நிமிடம்.
100	வால்ட் பல்பு	— 10	00
40 50	வால்ட் பல்பு / குழல் விளக்கு "விசிறி	— 25	00
60 40	வால்ட் பல்பு / "விசிறி	— 16	40
500	வால்ட் பல்பு	— 2	00
1000	வால்ட் பல்பு	— 1	00
2000	வால்ட் மின் அடுப்பா	— 0	30
தொலைக் காட்சி :	250 வால்ட்	— 4	00
	150 வால்ட்	— 6	40

குளிர்பதனப்பெட்டி (சிறிய அளவு) மாதம் 40 யூனிட்
(பெரிய அளவு) மாதம் 70 யூனிட்

இந்த அட்டவணை அடிப்படையில் மின்கட்டணத் தொகையைக் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

''நன்றி, அறிவியல் பண்ணை, தமிழ்ப் பல்கலைக் கழகம்''.

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

சென்ற இதழின் தொடர்ச்சி)

"பொன்காரண் கட்டளை கடுப்பக் கண்பின்
புன்காய்ச்சுண்ணம் புடைத்த மார்பின்"

என்பதன்கண் கடுத்தல் கட்டளைக்கல்லிற்கும் மார்பிற்கும் உரியதாதலன்றிப் பொன்னுக்கும் சுண்ணத்திற்கும் உரிய தாகாமையறிக. இவ்வனம் வருதல் அடையடுத்த உவமா மென்க.

"வேங்கை வீயுறு துறுகல் இரும்புலிக் குருளையிற் றோன்றும்" என்பது மது.

உவமப்போலி என்னும் உள்ளுறை உவமம்

இதுகாறும் ஏனையுவமத்திற் குரிய இலக்கணங்களை ஒருவாறு தொகுத்துக் கூறி இனி உள்ளுறையாக வரும் உவமப் போலி பற்றிய இலக்கண மரபினைக் கூறத் தொடங்கு கின்றார்.

உவமப் போலி என்பதற்கு உவமத்தை ஒத்தது என்பது பொருளாகும். ஒப்பாவது ஒருபுடை பொருந்தி நிற்றல் என்பது மேலே விளக்கப்பட்டது. போலி-போல்வது.

உள்ளுறை உவமம் சுட்டு நகை சிறப்பெனக்
கெடலரும் மரபின் உள்ளுறை ஐந்தே (பொருளி—)

என்னும் சூத்திரத்திற் கூறிய உள்ளுறைவகை ஐந்தனுள் உவமம் என்பதே ஈண்டுக் கூறப்படும் உவமப் போலியாகும். 'உள்ளுறை' என்னும் குறியீடு அவ் ஐந்தற்கும் உரிய பொதுக் கூறியீடாகும். உவமம் பற்றி வரும் உள்ளுறையை உள்ளுறை யுவமம் என வழங்குதல் மரபு என்னை ? ஏனையுவமத்திற்கு இனமாக நிற்பது அதுவே யாகலான். உள்ளுறை எனத் தனித்துக் கூறும் வழிப் பெரும்பான்மையும் அஃது இறைச்சியையே குறித்து நிற்கும் என்பது அச்சூத்திர உரையுள் விளக்கப்பட்டது.

மற்று உள்ளுறை உவமத்தை உவமப் போலி என்றது என்னையெனின் அஃது ஏனையுவமம் போலப் பொருள் இது உவம் இது என வேறு வேறாக விரிந்து நில்லாமல் பொருளைச்

சிறப்பித்து அடையாக நிற்கும் சொற்களே கூறுவோரது குறிப்பான் உவமமாக அமைந்து அதுவே (உவமேயத்தையும்) பொருளையும் தோற்றுவித்து உவமத்திற்குரிய இலக்கணங் களைப் பெற்றுப் பொருள் புலப்பாடு செய்தலின் என்க.

அஃது ஏனையுவமம்போல வெளிப்படையாக அமையாமல் குறித்துக் கொள்ளப்படுதலை நோக்கிப் போலி எனப்பட்ட தென்க. அஃதாவது

கரும்புநடு பாத்தியிற் கலித்த தாமரை
சுரும்புபசி களையும் பெரும்புன லூர !
புதல்வன் ஈன்றவெம் முயங்கல் !
அதுவே தெய்யநின் மார்பு சிதைப்பதுவே [ஐங் 65]

எனவரும்.

இச் செய்யுளின் கண் புதல்வன் ஈன்ற எம் முயங்கல் என்றதனான் தலைவி இல்லறக் கிழமை பூண்டுள்ளவள் என்பதும் எம் முயங்கல் என்பதனான் அவள் புல வியுற்றுள்ளாள் என்பதும் புலனாயினவே தவிரத் தலைவியின் நிலையும் அவள் புலத்தற்குக் காரணமும் வெளிப்படையாக விளங்கவில்லை. ஆயினும் தலைவனை விளிக்குமிடத்து அவனது ஊரைப் பற்றிக் கரும்பு நடு பாத்தியிற் கலித்த தாமரை சுரும்பு பசிகளையும் பெரும்புனல் ஊர் என வருணித்து விளிக்கிறாள் அவ்வருணனை வெற்றெனத் தொடுத்ததாக எண்ண இயலாது. ஆதலின் அவ்வருணனையை ஆழ்ந்துநோக்கின் தலைவியின் உள்ளக்கிடக்கையை அஃது உள்ளடக்கி நிற்றலை அறியலாம்.

"கரும்பு நடுபாதியிற் கலித்ததாமரை சுரும்புபசி களையும் பெரும்புனல் ஊர்" என்பதனுள் உள்ளகருப்பொருள்களான் அது மருதத்திணை என்பதும் அத்திணைக்குச் சிறந்துரிமை பெற்று வரும் உரிப்பொருள் ஊடல் என்பதும் விளங்கும்.

இனி நோக்குடைய கரும்பு நடுதற்குரிய பாத்தியுள் நோக்கில்லாத தாமரை விரிந்து உண்ணவரும் சுரும்பினது பசியைக்களையும் என்னும் வருணனை தலைவி விளக்கக் கருதிய கருத்துக்களை உள்ளடக்கி நிற்கின்றது. அஃதாவது (கரும்பு போன்ற) காமக் கிழத்தியர்க்குரித்தாக அமைத்த இப்பேரில்லத்தில் (தாமரை போன்ற) யான் இல்லறக் கிழமை பூண்டு (தாமரை கலித்தலைப் போன்று) மகனைப் பெற்று

(கரும்பு போன்று) விருந்தாக வரும் விருந்தினரை ஓம்புகின்ற னென் என்னும் கருத்தினை உள்ளுறுத்து நிற்றலை உணரலாம்.

இங்ஙனம் அவ்வுள்ளுறையைத் தோற்றுவிக்கும் "கரும்பு நடுபாத்தியிற் ……… புனலூர" என்னும் கருப்பொருள் புனைவு நேரே உவமமாகாமல் உவமம் போல அமைந்து பொருளை விளக்கி நிற்றலின் உவமப்போலியாயிற்றென்க.

வினையுவமம் பயனுவமம் என்புழி அவ்வுவமம் வினையும், பயனுமாகிய பொருளின் தன்மையை விளக்கி நிற்றலைப் போல இஃது உள்ளமைந்து கிடக்கும் பொருளையும் அதன் தன்மையையும் விளக்கி நிற்றலின் உவமப்போலி எனலாயிற் றென்பது தெளிவாம்.

அவ்வாற்றான் உவமப்போலி என்னுமிடத்து அஃது உவம இலக்கணம் பற்றிய குறியீடு என்பதும் உள்ளுறையுவமம் என்னுமிடத்து அஃது அதன் செயன்மை பற்றிய இலக்கணக் குறியீடு என்பதும் விளங்கும்.

உள்ளுறையுவமத்தான் எய்தும் பொருட்பயனை

"இனிதுறு கிளவியும் துனியுறுகிளவியும்
உவமமருங்கிற் றோன்று மென்ப" (உவம —)

என மேற்கூறுவாராதலின், கரும்பு நடுபாத்தியிற் … … … … புனலூர்" என்பது துனியுறு கிளவியின்பாற் படுமென்க.

சூ. 23. பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி
முன்னமரபிற் கூறுங்காலைத்
துணிவொடு வருஉம் துணிவினோர் கொளினே.

கருத்து :- இஃது உவமப்போலி கூறும் முறையையும் அதனை உணரும் முறையையும் பற்றிக் கூறுகின்றது.

பொருள் : உவமத்தை அதனான் விளக்கப்படும் பொருளொடு அமைத்து வேறுபடக் கூறாமல் உவமமாகப் பிறப்பிக்கும் பொருளொடு ஒருங்கமையக் கருதிக் குறிப்பாற் பொருள் விளக்கும் இலக்கண நெறி யானே உவமங் கூறுமிடத்துத் துணியும் உணர் வுடையோர் கொள்ளின் அத்துணிவின்கண் உவமப் போலியானது உள்ளுறைப் பொருள் உணருமாறு வரும்.

'படாது' என்பது படுத்தாது எனப் பிறவினைப் பொருட்டாய் நின்றது. 'படாது' என்பதற்கும் 'கூறுங்காலை' என்பதற்கும் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டன. 'வரும்' என்பதற்கு வினைமுதல் வருவிக்கப்பட்டது.

'துணிவு' என்பது எண்ணித் துணிககருமம் என்புழிப் போல மேற்கொள்ளுதலை உணர்த்தி நின்றது.

அகத்திணையியலுள் "உள்ளுறுத் திதனொடு ஒத்துப் பொருள் முடிகென உள்ளுறுத்திறுவதை உள்ளுறையுவமம்" என அதன் இலக்கணம் கூறப்பட்டமையின் அதனைச் சுட்டி ஈண்டுப் 'பிறிதொடுபடாது' என்றும்

"உள்ளுறைதெய்வம் ஒழிந்ததை நிலனெனக்
கொள்ளும் என்ப குறியறிந் தோரே" (அகத் -)

என்றதனுன் அக் கருப்பொருள்களைச் சுட்டிப் "பிறப்பொடு நோக்கி" என்றும்

இஃது உவமம் இதனாற்றோத்துவித்து விளக்கப் பெறும் பொருள் இதுவென்பது கூறுவோரது குறிப்பினாற் பெறப் படுதலானும் அக்குறிப்பு மரபினைத் தழுவி நிற்றல் வேண்டுமாகலானும் "முன்ன மரபிற் கூறுங்காலை" என்றும்

இஃது உள்ளுறை இஃது இறைச்சி என்றாங்கு உய்த் துணர்வார்க்கன்றி உள்ளுறையானது செவ்விதின் விளங்காமை யான் "துணிவினோர் கொளினே' என்றும் கூறினார்.

எ.டு. : கரும்பு நடுபாத்தியிற் .... சிதைப்பதுவே
(ஐங்-65)

இதற்கு விளக்கம் மேற் கூறப்பட்டது ஆண்டு கண்டு கொள்க.

இனி இச்சூத்திரத்திற்குரிய பேராசிரியரின் உரையை நோக்குமிடத்து அவரும் "முன்ன மரயின்" என்றே பாடங் கொண்டமை புலனாகும். முன்னை மரபென்னும் பாடம் எழுதினோர் செய்தபிழை எனத் தெரிகின்றது.

இதற்கு இளம்பூரணர் கூறும் உரையும் எடுத்துக்காட்டுக் களும் "வேறுபடவந்த உவமத் தோற்றம்" என்னும் சூத்திரத்துள் அடங்குமென்க.

சூ. 24 உவமப்போலி ஐந்தென மொழிப

கருத்து : மேற்கூறிய உவமப்போலி வகைப்படுமாறு கூறுகின்றது.

பொருள் : உவமப்போலியாற் பொருள் தோன்றும் வகை ஐந்து எனக் கூறுவர் புலவர். அவை ஆமாறு வருஞ்சூத்திரத்தாற் கூறுப.

சூ. 25. தவலருஞ் சிறப்பின் அத்தன்மை நாடின்
வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்
பிறப்பினும் வரூஉம் திறந்த என்ப

கருத்து : மேற்கூறிய ஐந்தும் வருமாறு கூறுகின்றது.

பொருள் : தபுதலில்லாத சிறப்பினையுடைய அவ்வியல்புகளை ஆராயின் அவை தொழிலானும் பயத்தானும், உறுப்பானும் உருவானும் பிறப்பானும் வரும் திறப்பாடுடையன என்று கூறுவர் புலவர்.

என்றது: விளக்க எடுத்துக்கொண்ட பொருளின் தன்மையை ஏனையுவமமானது வினை, பயன், மெய், உரு. கிழக்கிடு பொருள் என்னும் ஐந்துவகையான் விளக்கிநிற்குமாறு போல உவமப்போலியானது வினை, பயன், உறுப்பு, உரு, பிறப்பு என்னும் வகையான் உள்ளுறைப்பொருளை விளக்கி நிற்கும் என்றவாறு,

நோயும் இன்பமும் இருவகைநிலையிற்
காமங்கண்ணிய மரபிடை தெரிய
....
இருபெயர் மூன்றும் உரியவாக
உவம வாயிற் படுத்தலும் உவமம்
ஒன்றிடத்திருவர்க்கும் சரிய பாற் கிளவி (பொரு-2)
இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்
உவம மருங்கிற் றோன்று மென்ப (உவம-)

என்பவற்றான் உள்ளுறை உவமம் தோன்றுதற்குரிய நிலைக்களம். நோயும் இன்பமும், துனியும் என்பது பெறப்படுதலான் உவமப்போலி நிலைக்களம் பற்றிப் பிறிதுமொரு சூத்திரம் மிகைபடக் கூறாராயினார் எனக,

சிறப்புநலன் முதலாக ஏனையுவமத்திற்குக் கூறிய ஐந்துமே உவமப்போலிக்கும் நிலைக்களம் என்பார் பேராசிரியர். அவை பொருளின்கட் கிடக்கும் பண்புகளாதலின், வரைதல் வேட்கையும், புணர்ச்சி வேட்கையும், பிரிவச்சமும் ஆற்றாமையும், தலைவனது பரத்தைமை காரணமாகத் தோன்றும் புலவியும், துனியும், தலைவனது அருளிப்பாடும் பற்றித்தோன்றும் உள்ளுறை உவமத்திற்கு அவை நிலைக்களமாதல் பொருந்தாமையறிக.

எ-டு. 1 **வினை :** வினையாவது கருப்பொருள் நிகழ்ச்சிகளுள் அவற்றின் தொழில்பற்றித் தோன்றுவதாகும்.

கருங்கோட் டெருமை கயிறுபரிந் தசைஇ
நெடுங்கதிர் நெல்லின் நாள்மேயலாரும்
புனல்முற் றூரன் பகலும்
படர்மலி யருநோய் செய்தனன் எமக்கே (ஐங்-95)

எனவரும் இத்தலைவி கூற்றினுள் கரணமொடுபுணர்த்த கற்புக்கடம் பூண்ட தன்னைத் தலைவன் இகழ்ந்து சென்று பரத்தையரை நுகரும் இயல்பினனாக உள்ளான் என்னும் உள்ளுறைப் பொருள்

கருங்கோட்டெருமை ...... மேயலாரும் ''
என்னும் கருப்பொருளின் தொழிலை உவமமாகக் கொண்டு தோன்றியவாற்றினைக் கண்டு கொள்க இதன் கண் துனியுறு கிளவி தோன்றிற்று.

2. **பயம்** = பயன். பயனாவது கருப்பொருளின் செயல்களான் அமையும் பயன்பற்றித் தோன்றுவதாகும்.

வேப்பு நனையன்ன நெடுங்கட் கள்வன்
தண்ணக மண்ணளை நிறைய நெல்லின்
இரும்பூ வுறைக்கும் ஊரற்கிவள்
பெருங்கவி னிழப்பது எவன்கொலன்னாய் (ஐங்-30)

எனவரும் இத்தோழி கூற்றினுள் தலைவன் தன் இனிய மனையிடத்துத்தான் ஈட்டிய செல்வத்தை நிரப்பும் இயல்பினன் அதனான் அவனுக்கு வரைவு நேர்ந்து தலைவி இல்லறப் பயன்கொள்ளச் செயதல் வேண்டும் என்னும் உள்ளுறைப் பொருள்

தண்ணக மண்ணனை ...... இரும்பூவுறைக்கும் என்னும் பயன்பாடு பற்றித் தோன்றியவாறு காண்க. இதன்கண் இனிதுறு கிளவி தோன்றிற்று.

3 உறுப்பு : உறுப்பாவது சினை, அஃது ஈண்டு வடிவினை உணர்த்தி நின்றது. எனவே இஃது வடிவுபற்றித் தோன்றுவதாகும் என்பது பெறப்படும்.

ஏனையுவமத் தோற்றத்தின்கண் மெய் என்றும் ஈண்டு உறுப்பென்றும் கூறியதன் கருத்தாவது. ஆண்டு உறுப்பினையும் ஈண்டு மெய்யினையும் கூட்டிக் கொள்ள வைத்தலாம்.

எ.டு. அகன்றுறை அணிபெறப் புதலொடு தாழ்ந்த
பகன்றைப்பூ உறநீண்ட பாசடைத் தாமரை
கண்பொர ஒளிவிட்ட வெள்ளிய வள்ளத்தாற்
றண்கமழ் நறுந்தேறல் உண்பவள் முகம்போல
வண்பிணி தளைவிடூஉம் வயலணி நல்லூர (கலி-8)

எனவரும் இத்தலைவி கூற்றினுள் பரத்தையர் சேரிக்கண் பாணர் முதலிய வாயிலொடு வந்து தங்கியிருக்கும் விருந்தியற் பரத்தையைப் பொருந்தி நிற்கும் தலைவன். என்னும் உள்ளுறைப் பொருள்

அகன்றுறை .... தாமரை. என்பவற்றின் வடிவு பற்றித் தோன்றியவாறு கண்டுகொள்க. இதன்கண் துனியுறு கிளவி தோன்றிற்று.

4. உருவாவது வண்ணம்: அது சுவை முதலாகிய பண்புகளையும் அகப்படுத்தி நிற்குமென்பது ஏனையுவம உரையின் கண் விளக்கப்பட்டது.

எ.டு. 'வேங்கை தொலைத்த' என்னும் குறிஞ்சிக் கலியுள்,
நுண்பொறி மான்செவி போல வெதிர்முளைக்
கண்பொதி பாளை கழன்றுகும் பண்பிற்றே
மாறுகொண் டாற்றா ரெனினும் பிறர்குற்றம்
கூறுதல் தேற்றா தான் குன்று (குறிஞ்சிக்கலி-7)

எனவரும் இத்தலைவி கூற்றினுள் தலைவன் இதுகாறும் வரைதற்கு முயலாமையான் தன் மேனியிற்றோன்றிய வருத்தம் நீங்கி இனிப்பொலிவுறும். என்னும், உள்ளுறைப்பொருள்

வெதிர்முளைக் கண்பொதி பாளை கழன்றுகும் பண்பிற்று'

எனப்பாளை நீங்கிய வெதிரின் உருப்பற்றித் தோன்றியவாறு கண்டுகொள்க.

இதன்கண் இனிதுறு கிளவி தோன்றிற்று

5. **பிறப்பாவது குலம்.** அது குலப்பிறப்புப் பற்றித் தோன்றுவதாகும்.

எ - டு : கரைசேர் வேழங் கரும்பிற் பூக்கும்
துறைகே ழூரன் கொடுமை நன்றும்
ஆற்றுக தில்ல யாமே
தோற்க தில்லவெம் தடமென்றோளே (ஐங்-12)

எனவரும் இத்தலைவி கூற்றினுள் பொது மகளாகிய பரத்தை குலமகளிரைப் போலச் சிறப்புச் செய்து கொண்டு ஒழுகா நிற்பாள், என்னும் உள்ளுறைப் பொருள்

'வேழம் கரும்பிற்பூக்கும்' எனச் சாதி (பிறப்புப்) பற்றித் தோன்றியவாறு காண்க.

இதன்கண் துனியுறு கிளவி தோன்றிற்று.

இனித் "தன் பார்ப்புத்தின்னும் அன்பின் முதலையொடு வெண்பூம் பொய்கைத் தவனூர் என்பது (ஐங்-41) என்னும் செய்யுளுள் "தன்பார்ப்புத்தின்னும் அன்பில் முதலை" என்றதனான் தலைவன் கொடுமையும் "வெண்பூம் பொய்கைத்து" என்றதனான் தலைவி பசந்துள்ள நிலைமையும் புலப்படுத்தலின் வினையும் உருவும் ஒருங்குவந்தன.

பிறவும் இவ்வாறு விரவிவருவனவும் ஓர்ந்து கொள்க.

சூ. 26 கிழவி சொல்லின் அவளறி கிளவி.

கருத்து: இச்சூத்திர முதலாக எட்டுச் சூத்திரங்கள் அக ஒழுக்கத்தின்கண் உவமப் போலி கூறுதற்குரிய மாந்தரையும் அவர் கூறும் முறைமையும் பற்றியனவாம். அவற்றுள் இச்சூத்திரம்தலைவி உவமப்போலி கூறுமாறு இது வென்கின்றது. உவமப்போலி என்பது அதிகாரத்தான் வந்தது.

பொருள் : உவமப்போலியைத் தலைவி கூறுமாயின் அஃது அவள் அறிந்த பொருள்பற்றிவரும். கிளவி என்றது பொருளை.

எ டு. ஒன்றேனல்லேன் ஒன்றுவென் [குறுந்]

என்னும் செய்யுளுள்

"பொருகளிறு மிதித்த நெறிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்று கொய மலரும்"

என்னும் உள்ளுறைக்கிளவி தலைவி நாடொறும் படப்பையுள் காணும் பொருளாதலின் அஃது அவளறிகிளவியாதல் காணலாம்.

பொய்கைப்பள்ளி புலவுநாறு நீர்நாய்
வாளை நாளிரை பெறூஉம் ஊரன் [ஐங்-62]

என்பதும் அவளறிந்த கிளவியேயாம்.

"தன்பார்ப்புத் தின்னும் அன்பில் முதலையொடு
வெண்பூம் பொய்கைத்தவனூர்" [ஐங்-41]

என்பதனுள்வரும் கருப்பொருள் அவள் கேட்டறிந்து கொண்டவையாதலின் அவளறிகிளவியேயாம்.

இவ்வாறு வருவனவற்றைத் தோழி கூற்றெனக் கருதுவார் பேராசிரியர். அதற்கு அவர் கூறுங்காரணம் பொருந்தாமை யறியலாம்.

சூ. 27. தோழிக்காயின் நிலம்பெயர்ந்துரையாது.
கருத்து :- உவமப்போலி தோழி கூற்றின்கண் அமையுமாறு பற்றிக் கூறுகின்றது.

பொருள்:- உவமப்போலி தோழி கூற்றிற்கு உரியதாகிவரின் அஃது அந்நிலத்துக் கருப்பொருளின்றும் பெயர்ந்துரைத்தலாக அமையாது.

என்றது. தோழி அத்திணைக்குரிய நிலத்தில் உள்ளகருப் பொருள் பற்றிக் கூறுவதல்லது பிறநிலத்துள்ள பொருள் பற்றிக் கூறுவாளாகச் செய்யுள் செய்தல் அமையாது என்றவாறு.

எ.டு. காமம் ஒழிவதாயினும் யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென அருவி
விடரகத்தியம் பும்நாட (குறு-42)

என்பது, குறிஞ்சித்திணையுள் தோழி கூற்று. இதனகத்து வந்துள்ள அருவியும் விடரகமும் அந்நிலத்துப் பொருளா யுள்ளமை தெளிவாம்.

யாரினும் இனியன் பேரன்பினனே
உள்ளூர்க் குரீஇத்துள்ளு நடைச் சேவல்
சூன் முதிர் பேடைக்கு ஈனில் இழைஇயர்
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறாவெண்பூக் கொழுதும்
யாணர் ஊரன் பாணன்வாயே [குறு-85]

இது மருதத்திணையுள் தோழி கூற்று

முட்கால் இறவின் முடங்குபுறப் பெருங்கிளை
புணரி இடுதிரை தரூஉம் துறைவன்
புணரிய இருந்த ஞான்றும்
இன்னது மன்னோ நன்னுதற் கவினே (குறு-109)

இது நெய்தல் திணையுள் தோழிகூற்று

கொடுங்கட் காக்கைக் கூர்வாய்ப் பேடை
நடுங்குசிறைப் பிள்ளை தழீஇக் கிளைபயிர்ந்து
கருங்கட்கருனைச் செந்நெல் வெண்சோறு
சூருடைப் பலியொடுகவரிய குறுங்காற்
கூழுடை நன்மனை குழுவின இருக்கும்
மூதில் .... (நற் - 367)

இது முல்லைத்திணையுள் தோழி கூற்று பிறவும் அன்ன. "நிலம் பெயர்ந்துரையாது" என எதிர்மறை முகத்தாற் கூறினமையின் சிறுபான்மை பிற நிலத்திற்குரிய மாவும் மரமும் மயங்கிவரினும் அமைத்துக் கொள்ளப்படும்.

சூ. 28. கிழவோற்காயின் உரனொடு கிளக்கும்.

கருத்து : உவமப்போலி தலைவனுக்கு உரியதாகவரின் அஃது அவன் அறிவுடைமை தோன்றக் கிளக்கப்படும். கிளக்கும் என்பது செயப்பாட்டு வினைப்பொருளில் நின்றது.

எ.டு : இருங்கழிச் சேயிறா இனப்புள் ளாரும்
கொற்கைக் கோமான் கொற்கைப் பெருந்துறை

வைகுறை மலரும் நெய்தல் போலத்
தகை பெரிதுடைய காதலி கண்ணே (ஐங் - 188)

இதன்கண் தலைவி அருள் நோக்குடையவள் என்பதை ஏனையுவமத்தாற் சுட்டிக் கூறி அவள் சுற்றத்தொடு விருந்தினரைப் பேணும் இயல்பினள் என்னும் உள்ளுறையைத் தன் அறிவுடைமை தோன்றக் கிளத்தியவாறு கண்டு கொள்க.

கருங்கோட்டெருமைச் செங்கண் புனிற்றாக்
காதற்குழவிக்கு ஊறுமுலை மடுக்கும்
நுந்தை நும்மூர் வருதும்
ஒண்டொடி மடந்தை நின்னையாம் பெறினே
(ஐங் - 92)

இதன்கண், நுந்தை பகைவர்க்கு அச்சந்தரும் வலியின னாயினும் நின்பாற் பேரன் பினனாதலின் நீ வேட்டதை நல்கும் என்னும் உள்ளுறையைக்

கருங்கோட்டெருமை ...... மடுக்கும்

என்பதனாற் கூறித் தான் வரைவு வேண்டித் தன் தமரைச் செலுத்துங் கருத்தினனாதலைத் தலைவி உணரும் வண்ணம் தன் உரனுடைமை தோன்றத் தலைவன் கிளத்தியவாறு கண்டு கொள்க.

பகன்றை வான் மலர் மிடைந்த கோட்டைக்
கருந்தா ளெருமைக் கன்று வெரூஉம்
பொய்கை யூரன் மகளிவள்
பொய்கைப் பூவின் நறுந்தண்ணியளே (ஐங் — 97)

இதன்கண் தலைவன் தனக்கு அவையோர் அணிவித்த தோள்மாலையை பிறளொருத்தி அணிவித்ததாகக் கருதி மருளும் பேதைமையுடையாள் தலைவி என்னும் உள்ளுறை கூறித் தலைவி அங்ஙனம் கருதிவெருவினும் தனது தாயாற் பயன்கொள்ளுதலைத் தவிராத கன்றுபோல இன்புறும் அவளது இயல்பினைத் தன் உரனுடைமை தோன்றப்

"பொய்கைப் பூவின் நறுந்தண்ணியளே"

எனப்புலப்படுத்தியமை கண்டு கொள்க. பிறவு மன்ன.

சூ. 29. ஏனோர்க் கெல்லாம் இடம்வரைவின்றே

கருத்து : உவமப் போலி ஏனோர் கூறுமிடத்து அமையுமாறு விளம்புகின்றது.

இச்சூத்திரம் "தோழிக்காயின் நிலம் பெயர்ந்துரையாது" என்பதனொடு நோக்குடையதாகும். அது கருதிப் பேராசிரியர் இந் நான்கு சூத்திரங்களையும் இரண்டு சூத்திரமாக அமைத்துக் கொண்டார் எனத் தெரிகின்றது. அங்ஙனம் இணைத்துக் கூறல் சூத்திர யாப்பு நெறிக்கு ஏற்புடைத்தாகாது.

பொருள் : உவமப்போலி தலைவி, தலைவன், தோழி அல்லாத ஏனைய அகத்திணை மாந்தர்க்கெல்லாம் உரியதாகவரின் நிலம் பற்றியவரையறையின்றாம்.

என்றது: உவமப் போலி ஏனோர் கூறுமிடத்து அவ் வந்நிலத்துக் கருப்பொருள்களேயன்றிப் பிறநிலத்துக் கருப் பொருள் பற்றியும் அமைந்து வரும் என்றவாறு "எல்லாம் என்பது முழுது என்னும் பொருள்பட வந்த உரிச்சொல்.

எ - டு : பெருவரை மிசையது நெடுவெள்ளருவி
முதுவாய்க் கோடியர் முழவிற்றதும்பி
சிலம்பின் இழிதரும் இலங்குமலை வெற்ப !
நோதகன்றே காமம் யாவதும்
நன்றெனஉணரார் மாட்டும்
சென்றே நிற்கும் பெரும் பேதைமைத்தே (குறு-78)

என்னும் பாங்கன் கூற்றினுள் உயர்ந்த மலையிற்றோன்றிய அருவி, தாழ்ந்த பக்கமலையாகிய சிலம்பின் கண் இழிதரும் என்றது உயர்குலத்திற் பிறந்த தலைவனது உள்ளம் தாழ்ந்த குலத்தினளாகிய வேட்டுவமகள்பாற் சென்றது என்னும் உள்ளுறை பிறப்புப்பற்றித் தோன்றிய வாறும் அஃது அக் குறிஞ்சிக்குரிய கருப்பொருளேபற்றி நிற்குமாறும் கண்டு கொள்க.

ஏனை நிலத்துக் கருப்பொருள் கலந்து வருவனவும் பாகன், பாணன் முதலானோர் கூறும் உவமப்போலியும் வந்தவழிக் கண்டுகொள்க.

எம்வெங்காமம் இயைவதாயினும் (அகநா-15) என்னும் செய்யுட்கண்

அத்தஇருப்பை ஆர்கழல் புதுப்பூத்
துய்த்தவாய துகள்நிலம் பரக்கக்
கொன்றையஞ்சினைக் குழற்பழங் கொழுதி
வன்கை எண்கின் வயநிரை பரக்கும்''

எனவரும் செவிலி கூற்றினுள் செய்யுளின் திணையாகிய பாலைக்குரிய கருப்பொருளன்றி முல்லைக்குரிய பொருள்பற்றி உள்ளுறை தோன்றிய வாறு கண்டுகொள்க. பிறவும் அன்ன.

சூ. 30 இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்
உவமமருங் கிற்றோன்று மென்ப.

கருத்து :- தெய்வந்தவிர்ந்த ஏனைய கருப்பொருள்களை நிலனாகக் கொண்டு வரும் உவமப் போலியின் கண் அமையும் உள்ளுறைகளுள் திணையுணர்த்தற்குரிய வாகத் தோன்றும் பொருள்கள் இவை என்கின்றது.

பொருள் : இனிதுறுதலாகிய பொருளும் துனியுறுதலாகிய பொருளும் மேற்கூறிய உவமப் போலியான் புலனாகும் உள்ளுறையுவமத்தின்பாற்றோன்றும் எனக் கூறுவர் புலவர். கிளவி என்றது பொருளை

இனிதுறு கிளவியாவது : இன்புறுதற்குரியவாய வரைதலும். கூடுதலுறுதலுமாம். துனியுறுகிளவியாவது துன்புறுதற் குரியவாய பிரிவும் ஊடுதற்குக்காரணமாகிய பரத்தைமையுமாம்.

அகத்திணை ஒழுகலாறு என்பது கூடலும், ஊடலுமாகிய இருவகையே பற்றி நிகழுமாதலின் இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும் என இரண்டாக வகுத்து ஓதினார் என்க.

அவ்வாறாயின் கூடலும் ஊடலும் தோன்றுமென்னாது இங்ஙனம் பண்பு பற்றிக் கூறியது என்னையெனின், பாங்கன் செவிலி முதலானோர் கூறும் உள்ளுறைப் பொருளான் தோன்றுவன இன்பமும் துன்பமும் ஆதலன்றி அவர்க்குக் கூடலும் ஊடலும் ஆகாமையான் இங்ஙனம் பொதுப்படக் கூறித் தலைமக்களுக்கு உரியவாகுங்கால் கூடலும் ஊடலும் பற்றி நிகழும் என உய்த்துணரவைத்தார் என்க.

''மருங்கின்'' என்றதனான் உவமப் போலியே யன்றி ஏனைய உடனுறை (இறைச்சி) சுட்டு, நகை, சிறப்பு என்பவற்றிற்கும் இவ்விலக்கணம் ஒக்குமெனக் கொள்க.

சூ : கிழவோட்குவமம் ஈரிடத் துரித்தே

கருத்து : அகத்திணைக்குரிய மாந்தர் உள்ளுறை கூறும் முறைமையும் ஆண்டுத் தோன்றும் பொருளும் பற்றி மேலே கூறினார். இனி அவர்தாம் உள்ளுறை கூறும் இடம் பற்றிய மரபு கூறுவாராய் இச்சூத்திரத்தான் தலைவி உள்ளுறை கூறும் இடம் இவை என உணர்த்துகின்றார்.

பொருள் : உள்ளுறை உவமம் தலைவிக்கு இரண்டு இடங்களிற் கூறுதற்கு உரியதாகிவரும்.

அவ்இரண்டிடமாவன தோழியிடமும் தலைவனிடமுமாம் பிறரிடமாகத் தலைவி உள்ளுறை கூறப்பெறாள் என்றவாறு

தலைவி தோழியின் பாலும் தலைவன் பாலும் கூறியதற்கு எடுத்துக்காட்டு மேற்காட்டிய செய்யுளுள்ளும் தொகைப் பாக்களுள்ளும் கண்டுகொள்க.

இனி ஈரிடம் என்பதற்கு இளம்பூரணர்இனி துறு கிளவியும் துனியுறு கிளவியும் என்பார். அவை ஏனையோர் கூறும் உள்ளுறைக்கும் பொதுவாகலானும் மேல்வரும் சூத்திர விதிக ளொடு இயையாமையானும் அவர் கருத்துப் பொருந்தாமை யறியலாம்.

இனிப் பேராசிரியர் ஈரிடமாவன மருதமும் நெய்தலும் என்பார். உள்ளுறையுவமம் என்பது அகத்திணை மாந்தர் தம் உள்ளக்கருத்தினை முன்னத்தாற் புலப்படுத்துவதோர் இலக்கண நெறியாதலின் அதற்கு நிலங்களை உரிமை செய்து கூறல் சாலாமையானும், சாலுமேல் பெருவரவிற்றாய குறிஞ்சி நிலத்தைக் கூட்டி மூன்றிடத்துரித்தே எனக் கூறாமை குன்றக் கூறலென்னும் குற்றமாகலானும், இனி

'சென்ற நாட்ட' (குறு 183) என்னும் முல்லைத்திணைப் பாவினுள் "புல்லென் காயாப்பூக்கெழுபெருஞ்சினை மென் மயில் எருத்திற்றோன்றும், புன்புலவைப்பு" என்பது பருவ மல்லாதது பருவம் போல நம்மை மயக்கா நின்றது எனத் தலைவி உள்ளுறை கூறியதாகக் கொள்ளற்கும்

'மட்டம் பெய்த' (குறு-193) என்னும் முல்லைத்திணைப் பாடலுள்

இட்டுவாய்ச் சுனைய பகுவாய்த் தேரை
தட்டைப் பறையின் கறங்கும் நாடன்''

என்பது அறப்புறங்காவல் காரணமகாப் பிரிந்ததலைவனது பிரிவைத் தோழி மாறுபடக் கருதினாள் எனத் தலைவி உள்ளுறையமையக் கூறினாள் எனக் கொள்ளற்கும்

அம்மவாழிதோழி பன்னாள் (அகம்-249) என்னும் பாலைத் திணைச் செய்யுளின் கண்

... ... மழவர்
நாகா வீழ்த்துத் திற்றி தின்ற
புலவுக்களந் துழைஇய துகள்வாய்க் கோடை
நீள்வரைச் சிலம்பின் இறைவேட்டெழுந்த
வாள்வரி வயப்புலி தீண்டிய விளிசெத்து
வேறுவேறு கவலைய ஆறுபரிந் தலறி
உழைமான் இனநிரை யோடும்
கழைமாய் பிறங்கல் மலை ....'' என்பது

அம்பற் பெண்டிர் பிறர் பழியாயவற்றையே ஆராய்ந்து தம்பாற் கொள்ளுகின்றனர் என்றும் தலைவனாகிய வேறு பாட்டினைத் தெய்வத்தானாயது என அன்னை அஞ்சுகின்றாள் என்றும், உள்ளுறை தோன்றத் தலைவி கூறினாளாகக் கொள்ளற்கும் எற்பச் சான்றோர் செய்யுட்கள் வருதலானும் அவர் கருத்துப் பொருந்தாமையறியலாம்.

சூ. 32. கிழவோற் காயின் இடம் வரைவின்றே.

கருத்து : தலைவன் உள்ளுறை உவமங் கூறுதற்குரிய இடமாமாறு கூறுகின்றது.

பொருள்: உள்ளுறை உவமம் தலைவற்குரியதாயின் இடம் வரையறையில்லையாம்.

என்றது தலைவி, தோழி, பாங்கன், பாகன், பரத்தை, பாடினி, பாணன் என யாவர் மாட்டும் ஏற்புழித் தலைவன் உள்ளுறை உவமங் கூறற்குரியன் என்றவாறு. எடுத்துக்காட்டு மேற்காட்டியவற்றுள்ளும் சான்றோர் செய்யுட்களினும் கண்டு கொள்க.

சூ. 33 தோழியும் செவிலியும் பொருந்துவழி நோக்கிக் கூறுதற்குரியர் கொள்வழியான.

கருத்து:- தோழியும் செவிலியும் உள்ளுறை கூறுதற்குரிய இடமாமாறு கூறுகின்றது.

பொருள்:- தோழியும் செவிலியும் உள்ளுறை கூறுதலை மேற்கொள்ளுமிடத்துப் பொருந்தும் இடம் நோக்கிக் கூறுதற்குரியராவர்

தோழிக்குப் பொருந்துமிடமாவன; பொதுவாகத் தலைவன் தலைவி செவிலி யாகியோரும் கற்பின்கண் வாயில் களுமாம்.

செவிலிக்குப் பொருந்துமிடமாவன; தலைவி, தோழி நற்றாய் ஆகியோரும் உடன் போக்கின்கண் ஆற்றிடைப்பகவர் முதலானோருமாம்.

'கொள்வழியான' என்றதனான் பாங்கனும் பாகனும் தலைவனிடத்தும், வாயில்கள் தலைவன், தலைவி தோழியாகி யோரிடத்தும் பரத்தை தலைவனிடத்தும் கூறுதற்குரியரெனக் கொள்க. இவர்தாம் உள்ளுறை கூறுதல் அருகியன்றி நிகழாமை யான் எடுத்தோதாமல் விதப்பாற் கொள்ள வைத்தார் என அறிக.

எடுத்துக்காட்டுச் சங்கத் தொகைப்பாக்களுள்ளும் ஏனைய சான்றோர் இலக்கியத்தும் கண்டுகொள்க.

சூ. 34 வேறுபட வந்த உவமத்தோற்றம்
கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்.

கருத்து:- பிறிதொடுபடாது பிறப்பொடு நோக்கி என்னும் சூத்திர முதலாக மேலைச் சூத்திரமளவும் உவமப் போலி என்னும் உள்ளுறை யுவமம் பற்றிய மரபு களைத் தொகுத்துக் கூறி இனி இச்சூத்திரமுதலாக ஏனை உவமத்திற்குரிய எஞ்சிய இலக்கணங்களை ஓது வாராய் இச்சூத்திரத்தான் உவமம் கூறிய முறையானன்றி வேறுபட்டும் வரும் என்றும் அவற்றை அமைத்துக்கொள்ளுமாறும் பற்றிப் புறனடை கூறுகின்றார்.

பொருள் : வினை பயன் மெய் உரு என்னும் சூத்திர முதலாகக் கூறிய இலக்கணத்தினின்றும் வேறுபடச் சான்றோர் செய்யுட்கண் வந்த உவம வெளிப்பாட்டினை உவமிக்கப்படும் பொருள் கொள்ளும்நெறி நோக்கிப் பொருத்திக்கொள்க.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

தஞ்சாவூர் - பெயர்க் காரணம்

டாக்டர். த. கோ. பரமசிவம்

ஊர்ப்பெயர்களின் காரணங்கள் பல்வேறு வகைகளை மூலங்களாகக் கொண்டுள்ளன. இயற்கைச் சூழல் பற்றியன வாகச் சில ஊர்கள் காணப்படுகின்றன. (மலையூர், திருமலை, ஐயாறு, கருங்குளம்) சில ஊர்கள் இயற்கையோடியைந்த தாவரப்பெயர்களால் அழைக்கப் பெறுகின்றன. (நெல்லிக்கா, ஆரூர் (ஆர் - ஆத்தி), கடம்பவனம், ஆலங்காடு, மாங்காடு) சில ஊர்கள் தோற்றுவிக்கப் பெற்றவர்களின் பெயர்களால் அழைக்கப் பெறுகின்றன. (சேரமாதேவி, பட்டத்தாள்மங்கலம் இராசராசபுரம் ...) சில ஊர்கள் செயற்கைச் சூழல்களை, வரலாற்றுப் பின்னணிகளை உட்கொண்ட காரணங்களால் அழைக்கப் பெறுகின்றன. சிற்றம்பலம் (சிறிய அம்பலம் அமைந்த ஊர்). குடவாசல் (மேற்குவாசலாக உற்ற ஊர்), திருமறைக்காடு (சுரிச்சங்குகள் நிறைந்த ஊர்), இராசராசபுரம் (இராசராச மன்னனால் தோற்றுவிக்கப் பெற்ற ஊர்) எனப்பல காரணங்களால் ஊர்ப் பெயர்கள் தோன்றுகின்றன.

பிற்காலத் திரிபுகளாலும், மாற்றங்களாலும் உண்மைக் காரணங்கள் பல மறக்கப்படுகின்றன. சில ஊர்கள் திரியாமலும், மாறாமலும் கூடத் தோன்றிய காரணத்தை இழந்து புராணச் சுமையை ஏற்றிக்கொண்டு நிற்கின்றன.

குடவாசல் மேற்குவாசல் என்ற பொருளை இழந்து அமிர்தகுடம் பற்றிய புராணக் கதையைச் சுமக்க நேரிட்டது. திருமறைக்காடு (மறை - சுரிச்சங்கு) சங்குகள் நிறைந்த ஊர் என்பதை விட்டு வேதங்கள் பூசித்த ஊர் என்ற புராணக் கதையைச் சுமக்க நேரிட்டது. இவை அனைத்தும் சொற் பொருள் மாற்றத்தாலும் மாற்று விளக்கங்களாலும் தோன்றிய வேதனைகளே. இவ்வகை மாற்றங்களுக்குட் பட்டு நிற்கும் ஊர்களுள் தஞ்சாவூரும் ஒன்றாகும். இக்கட்டுரை தஞ்சாவூரின் பெயர்க்காரணத்தை ஆய்வு செய்கிறது.

தஞ்சாவூர் - பெயர் :

தஞ்சாவூர் என்றும் தஞ்சை என்றும் வழங்கப்பெறும் இவ்வூர் பற்றிய குறிப்புகள் இடைக்கால இலக்கியங்களினின்றும் கல்வெட்டுக்களினின்றும் கிடைக்கின்றன. சங்க இலக்கியங்களில் இவ்வூர் பற்றிய குறிப்புகள் யாண்டும் இடம் பெறவில்லை,

சங்க இலக்கியங்களுக்குப் பின்வந்த சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம் போன்ற நூல்களிலும் இவ்வூர் பற்றிய குறிப்புகள் காணப்பெறவில்லை. எனவே, கி. பி. ஏழாம் நூற்றாண்டுவரை இவ்வூர் பெருமை சான்ற ஊராக அமைந்திருக்கவில்லை எனத் தோன்றுகிறது.

தஞ்சாவூரைப் பற்றிய முதல் குறிப்பைத் தருபவர் திருநாவுக்கரசர். தஞ்சை, தஞ்சைத் தளிக்குளத்தார் – (திருப்பதிக்கோவை, திருவீழிமிழலைப் பதிகம்) என அவர் தம் தேவாரத்தில் குறிப்பிடுவார். தஞ்சை என்னும் பெயரில் வடிவ அமைப்பைக் காணும்போது அவ்வூரின் மருஉ வடிவத்தையே அவர் குறிப்பிட்டுள்ளதாகக் கருதலாம்.

எட்டாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வாழ்ந்த திருமங்கையாழ்வாரும் இவ்வூரைத் தஞ்சை என்றே குறிப்பிடு கின்றார்.

> வம்புலாஞ் சோலை மாமதில் தஞ்சை
> மாமணிக் கோயிலே (திவ். பிரபந் 953, 1090)

போக்குவார் போல் அப்பெயரின் முழுவடிவத்தையும் கூறுகின்றார்.

பிற்காலச் சோழராட்சிக்கு முன்பு பல்லவப் பேரரசுக்கு உட்பட்டுத் தஞ்சையை ஆண்ட முத்தரையரின் செந்தலைக் கல்வெட்டுக்களில் தஞ்சையைப்பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றன.

> கள்வர் கள்வன் **தஞ்சை** நற்புகழாளன்,
> **தஞ்சைத்** திறம் பாடி நின்றார்.
> குஞ்சிகமழ் கண்ணிக்கோமாறன் — தஞ்சைக்கோன்
> (EI, 13, 10. SII, VII, 529)

என வரும் கல்வெட்டுப் பகுதிகளில் தஞ்சை என்ற வடிவமே இடம் பெற்றுள்ளது.

ஏறக்குறைய கி. பி. 846 இல் பிற்காலச் சோழப் பேரரசை நிறுவிய விஜயாலயன் இவ்வூரைக் கைப்பற்றியதாகத் திருவாலங்காட்டுச் செப்பேடுகளும், கன்னியாகுமரிக் கல்வெட்டும் குறிப்பிடுகின்றன. வீரசோழபுரம் கல்வெட்டு இவனைத் "தஞ்சை கொண்ட கோப்பரகேசரி வர்மர்" என்று குறிப்பிடுகிறது. பாண்டியரின் சின்னமனூர்ச் செப்பேடுகளும் தஞ்சை என்றே குறிப்பிடுகின்றன (பெருந்தொகை பக். 892),

மேற்காட்டிய எல்லாச் சான்றுகளும் மரூஉ வடிவைக் கொண்டு அமைந்துள்ளன. ஆனால், மிகத் தெளிவாக, இப் பெயர் இன்றைய தஞ்சாவூரைத்தான் குறிக்கிறது என்பதை முதலாம் இராசராசன் கல்வெட்டுக்களே தெளிவு செய்கின்றன.

பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் என்று இவ்வூர் ஒரு கூற்றத்துக்குத் தலைநகராக இருந்த சிறப்புக் குறிப்பிடப்படுகின்றது. தஞ்சாவூர் உள்ளாலை, தஞ்சாவூர் புறம்படி என இந்நகர் இருபிரிவாக அமைந்து பல்வேறு வகைப்பட்ட பெருந்தெருக்களுடனும், கடைவீதிகளுடனும் விளங்கிய சிறப்பை அவை வெளியிடுகின்றன. (தஞ்சைப் பெருவுடையார்கோயில் கல்வெட்டுகள்)

தஞ்சை மராட்டியர் செப்பேடுகளிலும் இவ் விருவகை வடிவை நாம் காணமுடிகிறது.

> 'அளகாபுரி என்னும் நம்முடையதான தஞ்சாவூரான
> தஞ்சை மாநகரத்தில்' (II ஏகோசி 1735—37)

'தஞ்சநகரம் சீமை', 'தஞ்ச நகரம்', 'தஞ்ச நகர்', 'தஞ்சா ஊர்', தஞ்சாவூர்ச் சீமை', தஞ்சாவூரான தஞ்சை மாநகரத்தில் (மராட்டியர் செப்பேடுகள்) எனப் பலவாறு சிறு சிறு மாற்றங் களுடன் இவ்வூர்ப் பெயர் காணப்பெறுகிறது.

எனவே, இவ்வூரின் முழுவடிவம் தஞ்சாவூர் என்பதும், முன்கண்டன மரூஉ வடிவங்களே என்பதும் விளங்கும். இப் பெயரின் அமைப்பையும் காரணத்தையும் ஆய்வது இடப் பெயராய்வுக்குப் பெரிதும் பயன் தருவதாகும்.

தஞ்சாவூர் - பெயர்க் காரணம்

இப்பகுதியில் தஞ்சாவூரின் பெயர்க் காரணம் பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யப் பெறுகிறது.

தண்மை + செய் = தஞ்சை

வரலாற்றாய்வாளர் சி. கோவிந்தராசனார் தண்மை + செய் என்ற வடிவமே தஞ்சையாக அமையும் என்று கருதி, தஞ்சை என்ற வடிவை மரூஉ மொழியாகக் கொள்ளாமல் இயல்மொழியாகக் கூறுகின்றார். இடப்பெயர்களின்

வடிவமைதியையும், பிற்கால ஆட்சியையும் நோக்கும்போது அவர் கருத்துப் பொருந்துமாறில்லை எனத் தோன்றுகிறது.

தண் சாய் ஊர்

தஞ்சை மாவட்டத்தில் 'சாய்' எனப்பெறும் சம்புக் கோரை மிகுதியும் காணப்பெறுதலின் தாவரப் பெயர்களைக் கொண்டு அமையும் சாய்க்காடு, நெல்லிக்கா போலத் தண்சாய் ஊர் என்று கோரைக் காரணம் பற்றி இவ்வூர்ப் பெயர் அமைந்திருக்லாம் என்று பேராசிரியர் இரா. குமாரசாமி அவர்கள் கருதுகின்றார். (செய்தி மலர், இதழ் 7)

பொருநை நதிக்கரையிலும், பொன்னி நதிக் கரையிலும் இவ்வகைக்கோரை மிகுந்திருப்பதைக் காட்டும் அவர், தஞ்சாவூர் காவிரிக் கரையில் அமையவில்லை என்பதைச் சிந்திக்க வேண்டும். இப்போதுள்ள மாவட்ட அமைப்பை வைத்து ஊர்ப்பெயர்க் காரணத்தை ஆய்வு செய்தல் கூடாது. தனித்த ஊர் நிலையில் தான் ஆய்வு செய்யவேண்டும். பெரியார் தோன்றியதால் பெரியார் மாவட்டம் என்று பெயரிட்டமை போல மாவட்டத்தில் சாய்க்கோரை அதிகம் என்பதால் அந்த மாவட்டத் தலைநகருக்கு அப்பெயர் சூட்டப் பெற்றது என்பது சற்றும் பொருந்தாது.

மேலும் தஞ்சாவூரைச் சுற்றியுள்ள சிற்றூர்களை விடத் தஞ்சாவூர் சற்று மேடான நிலத்தில் அமைந்துள்ளது. மேட்டு நிலம் கோரை வளரும் சூழலுக்குரியதன்று.

ஆலூர்-தஞ்சாவூர்

தஞ்சாவூரின் பழைய வடிவம் ஆலூராக இருக்குமோ என்றும் அவர் கருதுகின்றார். (தமிழக வரலாற்றுச் செய்திகள் பக். 18, 19) அதுவும் பொருந்துமாறில்லை. கல்வெட்டுகளில் ஆலூர் தஞ்சாவூர்க் கூற்றத்தைச் சார்ந்ததாகக் குறிப்பிடப் பெறவில்லை.

மருகல் நாட்டுத் தஞ்சையை, (இது தலைநகர் தஞ்சையினின்று வேறான ஊர்) நம்பியாண்டார் நம்பி.

செழுநீர் மருகனன்னாட்டவர் தஞ்சை செருத் துணையே
(திருத், திருவந்தாதி-66)

என்று குறிப்பிட்டார். சேக்கிழார் பெருமான் நம் ஐயத்தைப் போக்குவார் போல் அப்பெயரின் முழுவடிவத்தையும் கூறுகின்றார்.

தள்ளும் பொன்னிநீர் நாட்டு மருகனாட்டுத் தஞ்சாவூர் (பெரி. செருத்துணைபு.1) என அவர் கூறும் பெயர் விளக்கமும் தஞ்சாவூர் என்பதன் மருஉ வடிவமே தஞ்சை என்பதையும், தஞ்சை என்பதன் மூலம் ஆவூர் அல்ல என்பதையும் விளக்குவதாம்.

தஞ்சாறை-தஞ்சை

தஞ்சாறை என்ற வடிவம் தான் தஞ்சாவூர் ஆகியிருக்கும் பழையாறை - பழையாறு ஆனது போல் என்று திரு. சோமலே அவர்கள் கருதுகின்றார். (தஞ். மாவட். பக். 373) ஆறை என்பது ஆறு என்பதன் மருஉ ஆக அமையுமேயன்றி, ஆரை என்பது 'கோட்டை' என்ற பொருள் பற்றி அமையாது என்பது அறிஞர் தேவநேயப் பாவாணர் கருத்தாகும் (வேர்ச்சொற் கட்டுரைகள் பக். 15). அவர் பழையாறையை எடுத்துக் காட்டுகிற போது தஞ்சாறை என்பது தஞ்சாறு என்று தானே மாறி இருக்க வேண்டும்? அவ்வாறு அமையாமையே அது பொருந்தாமை காட்டும்.

திருவாலங்காட்டுச் செப்பேடு இவ்வூரைத் தஞ்சாபுரி (SII, III, 205) என்று குறிப்பிடுவதை ஒப்பு நோக்க ஆறை என்ற சொல்லுக்கு இப்பெயரில் இடமில்லை என்பது மேலும் தெளிவாகும்.

தஞ்சம் அளித்த ஊரே தஞ்சாவூர்

மேற்கண்ட சொல்லாட்சிகளை ஒப்பிட்டு ஆய்வு செய்தால் தஞ்சாவூர் என்பது தஞ்சம் என்ற முதன்மைச் சொல்லையும், ஊர் என்ற பின்னொட்டையும் கொண்டமைந்ததே என்பது தெளிவாகின்றது. தஞ்சம் என்பது எதைக் குறிக்கிறது என்பதுதான் ஆய்வு செய்யப் பெற வேண்டிய சொல்லாகும்.

தஞ்சையைப் பற்றிய புராணங்கள் தஞ்சன் என்ற அசுரனை ஆனந்தவல்லி அம்மன் கொன்றதாகவும், அவ்வாறு கொன்ற போது அவ்வசுரன் தன் பேரால் அவ்வூர் வழங்கப் பெற வேண்டும் என வேண்டிக் கொண்டதாகவும், அக்காரணம்

பற்றியே இவ்வூர் தஞ்சாவூர் என அழைக்கப் பெற்றதாகவும் கூறும். இது சொல்லமைப்பிலேயே பொருந்துவதாகத் தோன்றவில்லை. தஞ்சன் + ஊர் - தஞ்சனூர் எனத்தான் அமையும். தஞ்சாவூர் என அமையாது. கஞ்சன் + ஊர் - கஞ்சனூர் என ஆனது போல இதுவும் தஞ்சனூர் எனத்தான் வழங்கி இருக்க வேண்டும். ஆயின், அவ்வாறு வழங்காமையின் இக்கதைக் காரணம் பொருந்தாமை புலப்படும். என்றாலும் இப்புராணக் கதையில் வரலாற்று உண்மை ஏதோ ஒளிந்திருப் பதாகத் தோன்றுகிறது.

முத்தரையர் வரலாறு, திருவாலங்காட்டுச் செப்பேடு, கன்னியாகுமரிக் கல்வெட்டு ஆகியவற்றை ஒப்பு நோக்கினால், இவ்வூர் ஏழாம் நூற்றாண்டுக்குப் பிறகே நகரமாக்கப்பட்டது என்பது தெளிவாகும். ஒன்பதாம் நூற்றாண்டில் சோழர் எழுச்சியின் காரணமாக மேலும் விரிவு செய்யப் பெற்றது என்பதும் போதரும். தஞ்சையின் வடபால் ஓடும் வடவாறு முதல் பராந்தகன் காலத்தில் வெட்டப்பெற்று வீரசோழ வடவாறு எனப்பெயர் பெற்றது என்ற செய்தி இவ் வுண்மையை வலியுறுத்துவதாம்.

அப்பருக்கு முற்பட்ட சோழர், களப்பிரர் போரால் தம் உறையூரை இழந்திருக்க வேண்டும். அவ்வாறு தம் தலைநகரையும் ஆட்சியையும் இழந்து தவித்த சோழர்க்கு இவ்வூர் தஞ்சமளித்து வாழ்வளித்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. அரசியல் வாழ்வு தேடிவந்த சோழர்க்கு இது தஞ்சமளித்ததால் இவ்வூர் தஞ்சாவூர் என அழைக்கப்பட்டது என்பதே பொருந்துவதாகும் உறையூரை இழந்த பின் தஞ்சாவூரினின்றே சோழர் சிற்றரசராக விளங்கி இருக்க வேண்டும். சிற்றரசராக விளங்கிய போது மீண்டும் தஞ்சையை இழக்க நேரிட்டது. பிற்கால ஆட்சிக்கு அடிகோலிய விசயாலயன் தஞ்சையை மீட்ட செய்தியைப் பெரிதாகக் கருதி, தஞ்சை கொண்ட கோப்பரகேசரி எனப் பெருமையாகக் கூறிக்கொள்வதும் இக்கருத்துப் பற்றியே எனலாம்.

எனவே, தஞ்சம் + ஊர், > தஞ்ச ஊர் - தஞ்சா ஊர் ஆனது எனலாம். சொல் இணைப்பால் ம் கெடுவதும் அ ஆ - ஆவதும் இயல்பு எனத் தோன்றுகிறது.

சுறவம் மீன் - சுறாமீன், புறவுக்கால் - புறாக்கால்,

ம் + ம் > ம். சுறவு > சுறா குரவு > குரா

குரவமலர் - குராமலர், அசலம்புரி - அசலாபுரி, என வருகின்ற சொல் வடிவங்களைக் காணத் தஞ்சம்ஊர் - தஞ்சாவூர் என அமைவதும் பொருந்தும் எனலாம்.

தஞ்சம் அளித்த காரணத்தால் அடைக்கலம் தந்த ஊர் என்ற பொருளில் ஓசா என்ற பெயருடைய ஓர் ஊர் பைபிளில் இடம் பெற்றுள்ளது (வேத அகராதி பக். 224). இச்செய்தியை ஒப்பு நோக்கினால் தஞ்சமளித்த ஊர் என்ற பொருளில் ஊர் அமைவது புதியதன்று, பொருந்தாதன்று என்பது தெளிவாகும்.

இவ்வுண்மையை உளங்கொண்ட பிற்கால இந்திய அரசர்களில் தலைசிறந்து விளங்கிய இராசராசன் இவ்வூரை மிகவும் பெருமைப் படுத்தினான்.

அய்ரோப்பியர் கண்ட முதலாவது குரங்கு

குறைந்த பட்சம் இராமாயணக் காலந்தொட்டு நப் நாட்டில் குரங்குகள் வாழ்ந்து வருகின்றன எனலாம். குரங்குகள் கிலுகிலுப்பை ஆட்டுவதுபற்றிச் சிறு பாணாற்றுப் படை என்ற சங்கப்பாடல் கூறுகிறது. நமது குழந்தைகளுக்குக் குரங்கு ஓர் அபூர்வப் பொருளன்று. ஆனால், அய்ரோப்பாவில் அப்படி இல்லை.

அய்ரோப்பியர்கள் முதன் முதலாக உயிருள்ள குரங்கை 1792 இல் தான் பார்த்தனர். அய்ரோப்பாவின் முதல் விலங்குக் காட்சிசாலை பாரிசில் 1792 இல் ஏற்படுத்தப்பட்டபோது உயிருள்ள குரங்கொன்றுக் கொண்டு வரப்பட்டது. அது பொதுமக்கள் பார்வைக்கு விடப்பட்டது.

ரஷ்யர்கள் 1744 இல் குரங்கை முதன் முதலாகப் பார்த்தனர். கோதுமை மாவு, வெண்ணெய் முதலியன அதன் உணவு என்றும், மாதத்துக்கு 5 ரூபிள் 80 கோபக் செலவாயிற்று என்றும் ஓர் ஆவணம் கூறுகின்றது.

'நன்றி ! அறிவியல் பண்ணை, தமிழ்ப் பல்கலைக் கழகம்''

தலை வழுக்கை ஏன் ஏற்படுகிறது ?

தலையிலிருந்து திடீர் திடீரென்று முடி உதிர்வது நமக்கு வேதனை தருகிறது. இவ்வாறு முடி உதிர்வதற்குப் பல காரணங்கள் உள்ளன. உணர்ச்சிக் கொந்தளிப்பு, டைபாய்டு காய்ச்சல், மலேரியா, மஞ்சள் காய்ச்சல் காரணமாக வழுக்கை விழுதலே பெரும்பான்மை. சத்துணவுக் குறைவு, இரும்புச் சத்துக் குறைவு 'வைட்டமின் ஏ', மாத்திரையை அதிகமாக உட்கொள்ளுதல் ஆகியவையும் தலை வழுக்கைக்குக் காரண மாகின்றன. இருப்பினும் கொஞ்சம் கவனம் செலுத்தினால், இழந்த முடிகளைப் பெற்று, இந்தத் தற்காலிக வழுக்கையை மாற்றிவிடலாம். ஆனால், தீக்காயம், இயந்திரங்களால் ஏற்படும் காயம், எக்ஸ் கதிர்ப்பாய்ச்சல் காரணமாக ஏற்படும் வழுக்கை நிரந்தரமானதுதான்; அதை மாற்ற முடியாது வழுக்கை விழுதற்குக்குடும்பப் பாரம்பரியமும் ஒரு காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் ஆண்களிடம்தான் வழுக்கை அதிகமாகத் தென்படுகிறது. இதற்குக் காரணம் குழந்தைப் பிறப்புக்குக் காரணமாக உள்ள ஜீன்களிலுள்ள (genens) குரோமோ சோம்கள் தான். மொத்தம் 23 இணை குரோமோசோம்கள் உண்டு. தாய்க்கும் தந்தைக்கும் 22 இணைபொது; 23-வது இணைதான் குழந்தை ஆணா பெண்ணா என்பதைத் தீர்மானிக்கிறது. இந்தப்பால்பிரி குரோமோசோம்கள் (Sex Chromosomes) ஒரு வகையில் தலை வழுக்கைக்குக் காரணமா கின்றன. தாயும் தந்தையும் முழு வழுக்கைத் தலையராக இருந்தால் அவர்களுக்குப் பிறக்கிற குழந்தைகளுக்கும் தலை வழுக்கையாதல் தவிர்க்க முடியாதது. இந்தப் பாரம்பரியப் பண்பை மாற்றுதல் எளிதன்று. அப்படி மாற்ற வேண்டு மானால், மருந்து மூலமோ, தைலங்கள் மூலமோ செய்ய இயலாது. 'முடி மாற்று சிகிச்சை' (hair transplanting) தேவைப்படலாம். வேறு உறுப்புகளிலுள்ள முடியைத் தலைக்கு மாற்றி அமைப்பதன்மூலம் வழுக்கையை மறைக்க லாம். இதற்கு அதிகச் செலவாகும். இருப்பினும் சில விஞ்ஞானிகள் செயற்கை முறையில் முடியை உண்டாக்க முயற்சி செய்து வருகிறார்கள்.

''நன்றி, அறிவியல் பண்ணை, தமிழ்ப் பல்கலைக் கழகம்''

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 001.

தமிழ்நாடு, இந்தியா

தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

1. Tamil Literature — Prof. M. S. Purnalingam Pillai — உரு. 85/— U.S.$ 17
2. மொழி நூல் — மாகறல் கார்த்திகேய முதலியார் — உரு. 75—
3. Tamil University Machine Translation System (TUMTS) — Rs. 75/— U.S.$ 15
   Co-authors : K. C. Chellamuthu K. Rangan
   K. Murugesan
4. A Study on the Thanjavur Art Plate — Prof. P. Saravanavel — Rs. 60/— U,S.$ 12
5. நாமதீப நிகண்டு — உரு 68—
   —கல்லிடைநகர் சிவசுப்பிரமணியக் கவிராயர்
6. மொழி நூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும் — உரு. 45/—
   —பேரா. கா. சுப்ரமணியப் பிள்ளை
7. Indians in South Africa — Prof. K. Nambi Arooran — Rs. 60/— U.S.$ 12

விற்பனைக் கழிவு: அஞ்சல் வழி 25%
நேரில் 30%
அஞ்சல் செலவு தனி
பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு 40%
விற்பனையாளர்களுக்குப் பெறும்படிகளுக்கு ஏற்ப கழிவு உண்டு.

தொடர்பு கொள்க:- பதிப்புத்துறை இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

கரந்தைத் தமிழ்ச் சங்கவெளியீடுகள்

யாழ் நூல் — விபுலானந்த அடிகள்	ரூ	50	00
கட்டுரைப் பொழில் (சங்க மணிவிழா மலர்)	ரூ.	30	00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ.	60	00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டு விழா நினைவுச் சிறப்பிதழ்	ரூ.	6	00
கபிலர் – நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ	4	00
நக்கீரர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	3	00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு – பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ.	2	00
கவியரசு நினைவு மலர்	ரூ.	1	00
தமிழரசி குறவஞ்சி	ரூ.	0	62
சிவமும் செந்தமிழும்–பாவலர் ச. பாலசுந்தரம்	ரூ	0	25

பிற வெளியீடுகள் :

கரந்தைக் கோவை (அகப்பொருட் கோவை நூல்) பேராசிரியர் ச. பாலசுந்தரம்		7	50
கலைக்கூத்தன் கவிதைகள்	ரூ.	6	00

நூல்கட்குக் கழிவு 20% தரப்பெறும். அஞ்சற் செலவு தனி. நூல்கள் வேண்டுவோர் கீழ்வரும் முகவரிக்கு எழுதுக.

தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613002.

பதிப்பாசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2.

பேராசிரியர். க. வெள்ளைவாரணன்,
142, கனகசபை நகர், சிதம்பரம்.

சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி., பி. எல்.,
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை.

டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம்.லிட்., பிஎச். டி.,
தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர். பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம். ஏ.,
துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

புலவர். மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவரா மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்-2.

திரு. பா. மதிவாணன், எம். ஏ., எம்.பில்.,
துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பதிப்பாசிரியர்
பேராசிரியர் ச. பாலசுந்தரம்

Regd. No. TN/TJ/17.

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு ....

11. The Curator,
Govt. Oriental Manuscripts Librar
Madras. 600 005.

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ.	2 50	3 00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	25 00	60 00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250 00	600 00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர் கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராசவீதி,
தஞ்சாவூர் - 613 009.